குமரி மலர்

ஆசிரியர்

ஏ. கே. செட்டியார்

50 காசு

கடவுள் ஒருவரே என்று நான் நம்பு கிறேன். அதனால் மனித சமூகம் முழு வதுமே ஒன்றுதான் என்று நான் கருது கிறேன்.

—காந்தியடிகள்

கோயமுத்தூர் முருகன் மில்ஸ் லிமிடெட்
மேட்டுப்பாளையம் ரோடு
கோயமுத்தூர்

C.N.C. & SONS (PRIVATE)
P. B. NO. 29, CANTONMENT
TIRUCHIRAPALLI

பொரபுதூரிலுள்ள தியான புத்தர்.

எம். கே. கிருஷ்ண செட்டியார்
அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்.

ANNOUNCEMENT.



"TEXTOOL"

TAKES PRIDE TO ANNOUNCE
THAT THEIR 4 CYLINDER
36 To 86 H. P.
AUTOMOTIVE DIESEL ENGINES

will be out in the market Soon!!
Await Further News !!!

MANUFACTURERS:-

Textool Company Limited,
Post Box No. 221,
COIMBATORE.

Phone: 409
1409

Gram:
'TEXTOLCO'

கல்யாணகாலங்களுக்கு.
உயர்ந்த
பட்டு
&
நூல்
ஜவுளிகள்
கிடைக்குமிடம்
S·R·B·K
ORIGINAL SHOP
S.R.B. குப்புசாமி அய்யர் & சன்
(பழய விலாஸம். S.R.B & SONS)
117, நையினியப்பநாயக்கன் தெரு, சென்னை. போன். 3506
230, கீழமாரட்வீதி, மதுரை. போன். 36.

வையகங் காப்பவ ரேனும் - சிறு
வாழைப் பழக்கடை வைப்பவ ரேனும்
பொய்யக லத்தொழில் செய்தே - பிறர்
போற்றிட வாழ்பவ ரெங்கணு மேலோர்

— பாரதியார்

லிங்கம் கம்பெனி

ரோஜா மார்க் நெய் தயாரிப்பவர்கள்

கோயமுத்தூர்

நம்பிக்கை

நாணயம்

உத்தரவாதம்

மருந்துகள் கிடைக்குமிடம்

SP. M. மெடிக்கல் மார்ட்

1 கீழச் சித்திரை வீதி

மதுரை

பிராஞ்சுகள் :

97, பாலேஸ் ரோடு - மதுரை

43, கிருஷ்ணராயர் தெப்பக்குளத் தெரு - மதுரை

எங்கள் பாலேஸ் ரோடு பிராஞ்சில் பகல், இரவு, எல்லா நேரங்களிலும் மருந்துகள் கிடைக்கும்.

போன் : 26 தந்தி: BONTEX

P. R. நாராயணசாமி ஐயர்

ஜவுளி வியாபாரம்

பெரிய கடைத் தெரு : திருச்சிறுப்பள்ளி

தங்களுக்குத் தேவையான எல்லா வித ஜவுளி தினுசுகளும் எங்களிடம் கிடைக்கும்.

எங்கள் ஒரு விலைக் கொள்கை தாங்கள் போற்றத் தக்கதே.

●

எங்கள் கிளை

பேன்ஸி ஹால்

(FANCY HALL)

சைனு பஜார்—திருச்சி

போன் : 165

பி. ஆர். நாராயணசாமி ஐயர் : திருச்சிறுப்பள்ளி

குமரி மலர் வெளியீடுகள்

1.	மலேயா முதல் கானடா வரை	ரூ.	2 – 50
2	அமெரிக்க நாட்டில்	”	5 – 00
3.	கரிபியன் கடலும் கயானவும்	”	4 – 00
4.	உலகம் சுற்றும் தமிழன்	”	2 – 00
5.	பிரயாணக் கட்டுரைகள்	”	1 – 50
6.	அண்டை நாடுகள்	”	0 – 90

வெளிவந்துவிட்டன.

●

ஐரோப்பா வழியாக

விரைவில் வெளிவரும்.

மலர் 15 இதழ் 8

விளம்பி - கார்த்திகை

உள்ளுறை

		பக்கம்
1.	நல்லுரை	1
2.	சிரிப்பு	4
3.	ஜாதி வித்தியாசம் —ராஜாஜி	7
4.	கேள்வியும் பதிலும் —காந்தியடிகள்	17
5.	லெனின் கடிதம்	22
6.	சர்வதேச பூபௌதிக ஆராய்ச்சி	24
7.	வேதாந்தம் என்றால் என்ன ? —ஓலாப் ஸ்டேபிள்டன்	27
8.	கொய்த மலர்கள்	30
9.	விமான யுகம்	38
10.	தெய்வப் பணி-இரு லட்சியங்கள்	43
11.	பார்மோஸா-கரையோரத் தீவுகள்	48
12.	மெட்ரிக் முறை	51
13.	இந்தியப் பாரம்பர்யத்தின் சிறப்பு	55
14.	மீட்சிப் படகு	62
15.	பூமி —எஸ். ஸ்ரீநிவாஸன்	67
16.	பிரிட்டனில் சர்க்கார் ஊழியர் சங்கம்	76
17.	முப்பரிமாண டெலிவிஷன்	80

நல்லுரை

[காஞ்சி காமகோடி பீட ஆசார்ய ஸ்வாமிகள் சென்னையில் நிகழ்த்திய உரைகளிலிருந்து தொகுத்தது]

நடராஜ தத்துவம்

இடது காலைத் தூக்கியபடி, மூன்றும் கண்ணுடன் சந்திரகலையைத் தலையில் அணிந்துள்ள நடராஜர் உருவத்தைத் தியானிப்பதில் விசேஷம் இருக்கிறது. நமது உடலை அழிக்கிறவன் காலன் அல்லது மரணதேவதை. காலம் என்பது சாமான்யமாகக் காலத்தையும் குறிக்கும். காலம் அழிவுக்கும் காரணமாகிறது; அனுகூலத்தையும் உண்டு பண்ணுகிறது. ஆண்டவன் இடது காலால் காலத்தை அடக்கி அதை ஜெயிக்கிறார். உயர்த்தப்பட்ட இடது கால், ஆண்டவன் காலத்தினால் கட்டுப்பட்டவன் அல்லது மரணத்தினால் பாதிக்கப்படுபவன் அல்லன் என்ற உண்மையை உணர்த்துகிறது.

ஆண்டவன் அனாதி. காமம் அல்லது ஆசைகள் தான் பிறப்புக்குக் காரணம். ஆண்டவன் தமது நெற்றிக் கண்ணாகிய மூன்றும் கண்ணால் காமத்தைக் கொளுத்தினார். ஆண்டவனின் மூன்றாவது கண், அவர் பற்று அற்றவர் என்பதைக் குறிக்கிறது. நாம் கண்களைக் கொண்டு வெளி விஷயங்களை நாம் பார்க்கிறோம். ஆனால் இந்தப் புலனை அடக்கி உட்புறம் செலுத்தி உள்ளிருக்கும் அந்தராத்மாவை அனுபவிக்க வேண்டுமானால், அதற்கு ஞானம்தான் முக்கிய சாதனம்.

ஆண்டவனின் மூன்ரும் கண் இந்த ஞானத்தையும் குறிக்கிறது. ஞானம் பிறந்தால் சாந்தியை மென்மேலும் அனுபவிக்கிரேம். இந்தச் சாந்தியைக் காட்டுவதுதான் ஆண்டவன் முடியிலுள்ள சந்திரகலே. சந்திரனின் அமிர் தத்திற்கு ஒத்த குளிர்ந்த கிரணங்களேப் போல் சாந்தி யளிப்பது வேறென்ன இருக்கிறது? அத்துடன் ஆண் டவன் தம் சடையில் கங்கையையும் வைத்துக் கொண்டி ருக்கிருர்.

இவ்விதம் தூக்கிய இடது கால், நெற்றிக் கண், சந்திரகலே ஆகியவற்றின் பூரண தத்துவங்களே உணர்ந்து, அவற்றுடன்கூடிய நடராஜப் பெருமானேத் தியானித்தால் சாசுவத மனச் சாந்தியையும் ஆனந்தத் தையும் அடையலாம்.

தூய உணவு

சுயம்பாகத்தை-தானே சமையல் செய்வதை-ஆசிரி யர்களும் மாணவர்களும் கற்கவேண்டும். நமது தர்மத் தின் அடிப்படை சித்த சுத்திதான். சித்த சுத்திக்குப் பல அம்சங்கள் காரணமாக உள்ளன. அவற்றில் சுத்த அல்லது தூய உணவு முக்கியமானது. பல நற்பண்புகள் ஏற்படுவதற்குத் தூய உணவு முக்கிய காரணமென்று மகரிஷிகள் கூறியுள்ளனர்.

சாப்பிடும் உணவுக்கும் சித்த சுத்திக்கும் என்ன, எப்படிச் சம்பந்தம் இருக்கும்? எனக் கேட்கலாம். உதாரணமாக மதுவை எடுத்துக் கொள்ளலாம். அது புத்தியைப் பாதித்து மனிதனே நிலேதவறச் செய்கிறது. ஆகவே உட்கொள்ளும் உணவுக்கும் மன நிலேக்கும் சம்பந்தம் இருக்கிறது.

தூயஉணவு சித்த சுத்தியை ஏற்படுத்தும். அதனுல் பக்தி, ஞானம், மேதை ஆகியவை பிறக்கின்றன.

மரத்தின் வேருக்கு நல்ல ஈரம்படும்படி தண்ணீர் விட்டால்தான், மரம் செழித்துப் பெரிதாக வளரும்; நல்ல பலனையும் தரும். இலைக்கும் தண்டுக்கும் மேலிருந்து மட்டும் தண்ணீர் ஊற்றினுல் போதாது; பலனும் கிடைக்காது.

நல்ல வாழ்க்கை நடத்த, பலமான அடிப்படை தூய உணவுதான்.

மௌனம்-ஓர் உயர் கலை

கலைகள் பலவிதம். ஜாலம். தந்திரம் முதலியவை வித்தை எனக் கூறப்படுகிறது. நடனம் முதலியவை கலை என வழங்கப்படுகிறது. கஜ கர்ணம், கோ கர்ணம் என்று கடினமான வித்தைகள் பற்றிச் சொல்லுகிருர்கள்.

கஜ கர்ணம் என்பது ஒருவர் யானைபோல தனது காதுகளை அசைப்பது. இதைச் செய்வது கஷ்டம். அதனுல் தான் என்ன கஜகர்ணம் போட்டாலும் நடக்காது என்ற வசனம்கூட வழக்கில் இருக்கிறது.

ஒரு பசுவின் முதுகைத் தொட்டால், அது உடனே சிலிர்க்கிறது. உடனே அதன் முதுகில்,குளத்தில் கல்லைப் போட்டால் ஒன்றன்பின் ஒன்ருக அலைச் சக்கரங்கள் தோன்றுவது போல, ஒன்றன்பின் ஒன்ருக அலைகள் மூலம் அந்தப் பசுவின் முதுகிலும் அதிர்ச்சி ஓடுகிறது. இதனைக் கோகர்ணம் என்பார்கள். ஒரு பசு செய்யும் இதர காரியங்கள் போலச் செய்து காட்டலாம். ஆனுல் இந்தக் கோகர்ணம் சுலபமாகச் செய்து காட்டக் கூடியதல்ல.

கலைகளில் எல்லாவற்றிலும் சிறந்தது ஒன்று உண்டு, அதுதான் மௌனம். இதைப் பழக முயன்ருல் தான்,இது எவ்வளவு கடினம் என்பது தெரியும். அதனுல் தான் இதனைப் பிரும்ம வித்தை என்கிருர்கள். இந்தப் பிரும்ம வித்தையைத்தான் அத்வைதம் என ஸ்ரீ சங்கரர் உலகுக்கு அருளியிருக்கிருர்.

சிரிப்பு

யாராயிருந்தாலும் சரி, எதுவா யிருந்தாலும் சரி விகடம் செய்து சிரிக்கும் உரிமை வேண்டும். வேறு எந்த உரிமையையும்விட மிகப் பிடிவாதமாய் இந்த உரிமையைத்தான் ஜன நாயகநாடுகள் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். கருத்துக்கள் நல்லவையாய் இருக்குமானல் விகடச் சிரிப்பை அவை தாங்கிக் கொள்ளும். பெரிய மனிதர்கள்தான் அதிகமாக இலக்காவார்கள். நாடுகளை இழக்கலாம்; செல்வாக்குக் குறையலாம்; ஆனல் விகடத்தை மட்டில் காப்பாற்றிக் கொண்டால் ஒரு தேசத்தின் நாகரிகம் நிலைத்துவிடும். பெரிய மனிதராயிற்றே பெரிய கருத்தாயிற்றே என்று விகடம் செய்ய அஞ்சக் கூடாது.

—நியூயார்க் டைம்ஸ்

சிரிப்பு என்பது அழுகைக்கு மாற்றுகும். நாம் சிரிக்கிற அநேக சந்தர்ப்பங்களில், அப்படிச் சிரிக்காவிட்டால் அழுதுவிடுவோம். கூட்டத்தோடு வாழ விரும்பும் சுபாவமுடையவன் மனிதன். அத்தகைய வாழ்வுக்கு அனுதாபம் மிக முக்கியமாகும். ஆனல் எதற்கெடுத்தாலும் அனுதாபம் செலுத்திக் கொண்டிருந்தால், மனிதன் பெரிய அழுமூஞ்சியாகி விடுவான். அந்த அபாயத்திலிருந்து நம்மைக் காப்பாற்றியிருக்கும் அற்புத வரம் நகைப்புத்தான்.

—டாக்டர் மெக்டோகல்

மிக உயர்ந்த உணர்ச்சிகளும், அனுதாபமும் நிறைந்த நரம்புகளை மனிதனுக்கு இயற்கை அன்னை

அளித்துள்ளாள். துயரமும் துன்பமும் நிறைந்த உலகில் அந்த நுட்பமான நரம்புகளைக் காப்பாற்றுவது எப்படி? அவற்றை மரத்து விடச் செய்யும் ஒரு லாகிரியையும் இயற்கை அன்னை சிருஷ்டித்திருக்கலாம். ஆனால், அவள் அப்படிச் செய்யாமல் துன்பத்தை இன்பமாக மாற்றும் ஒரு சூட்சமத்தையே சிருஷ்டித்துவிட்டாள். அதுதான் நகைச் சுவை என்பது.

—டாக்டர் ஆர். பி. காட்டெல்

நகைச்சுவை மனிதனுக்கு ஒரு சிறப்பான தன்மை யாகும். அது வாழ்வுக்கு அவசியமாகும். களிப்பும் கவர்ச்சியும் உண்டாக்கும்; கவலையைப் போக்கும். சிரிப்பினால் மனத்துக்கு ஆறுதல் உண்டு.

சிரிப்பிலும் பலவகை யுண்டு. அது அவரவர் உணர்ச்சிக் கேற்றபடியே அமையும். கோபச் சிரிப்பு, அசட்டுச் சிரிப்பு, கேலிச் சிரிப்பு, அகங்காரச் சிரிப்பு, அலட்சியச்சிரிப்பு, நயவஞ்சகச் சிரிப்பு ஆகியவை பிறரைப் புண்படுத்தும். அவை மனிதனுக்குள்ள கெட்ட உணர்ச்சிகளினின்றும் பிறப்பவை. ஆழ்ந்த கருத்தும் பயனுள்ள சொல்லும் கொண்ட நகைச் சொற்கள் பிறரை மகிழ்விப்பதுடன் நல்ல படிப்பினையும் தரும். அத்தகைய நகைச் சுவையே சிறந்தது.

—ஆனந்தன்

நாள் ஒன்றுக்குப் பல முறையாவது சிரிக்காத மனிதன் பைத்திய மில்லாமல் இருக்க முடியாது என் கிறார்கள் டாக்டர்கள். பீயரி வாச்செட் என்ற பிரெஞ்சு வைத்தியர் ஓர் விசித்திர வைத்தியம் புரிந்து வந்தார்.

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையிலும் அவருடைய பிரசங்க மண்டபத்தில், ஆண்களும் பெண்களுமாகப் பல நோயாளிகள் வந்து கூடினார்கள். மேடையில் டாக்டர்

ஏறியவுடன் விளக்குகள் அணைக்கப் பெறும்; நோயாளி கள் பேச்சை நிறுத்திக் கண்களை மூடிக் கொண்டுமௌன மாய் இருப்பார்கள்.

பிரமாதமாகச் சிரிக்க வைக்கும் இசைத் தட்டுக் களை வைப்பார்கள். அது நோயாளிகளுக் கெல்லாம் சிரிப்பை மூட்டும். எல்லோரும் விலாவறுந்துபோகும் படி விழுந்து விழுந்து சிரிப்பார்கள். அந்தச் சிரிப்புக் குறையாதிருப்பதற்காக, அரை மணி நேரம் வரை அந்த இசைத் தட்டுக்களை வைப்பார்கள். கண்களில் நீர் வரும் வரை நோயாளிகள் ஓயாமல் சிரிப்பார்கள்.

இம்மாதிரி ஆறுவாரம் சிரிப்புப் பயிற்சி நடைபெற் றதுமே, பல நோயாளிகள வியாதி தீர்ந்து குணமடைந் தார்களாம்.

ஜாதி வித்தியாசம்

ராஜாஜி

உலகத்தில் அநேக விதமான மரங்களும் இருக்கின்றன; மிருகங்களும் இருக்கின்றன. அவை எல்லாம் வேறு வேருனவை. அதேபோல் உலகத்தில் உள்ள பல தேச மக்களுடைய வழக்கங்களும் வேறு வேருனவை. அவை குறைபாடு உடையனவாக இருந்தால் அவற்றை நாம் சீர்திருத்தலாம். அவை கேடானவையாயிருப்பினும் அவற்ருல் அடையக்கூடிய பயனை அடைய முயலலாம். பறவையினுடைய சிறகு களும், மனிதனுடைய கைகளும், குதிரையினுடைய வாலும், பசுவினுடைய கொம்பும் எப்படி நன்மை பயப் பனவாகவு உளதோ, அப்படியேதான் சமூகப்பழக்க வழக்கங்களும் நன்மை பயப்பனவாகவும் தீமை பயப்பன வாகவும் உள. நாம் கைகளுக்குப் பதிலாகச் சிறகுகள் இருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும் என்று எண்ண லாம். அப்படியே பசுவின் கொம்பும் குதிரையின் வாலும் இருந்தால் நல்லது என்று எண்ணலாம். ஆனுல் அப்படி எண்ணுவது முற்றிலும் தவறே. நான் கூறு வதை வேறு விதமாக பொருள் கொண்டுவிடவேண்டாம். நாம் கூறும் உதாரணங்களுக்கும், பழக்க வழக்கங்களுக் கும் வேறுபாடு உண்டு என்பதை அறிவேன். மனிதன் சிறகை அடைய முடியாது. ஆனுல் நாம் நம்முடைய பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ள முடியும். நாம் பறவைகளுடைய உடலையும் மிருகங்களுடைய உடலையும்

மாற்றமுடியாது. பழக்க வழக்கங்களை மாற்ருதவரை அவற்ருல் நன்மையும் உண்டு. தீமையும் உண்டு. நமக்கு எது இல்லையோ அதற்காக வருந்த வேண்டிய தில்லை. பழக்க வழக்கங்களை மாற்ற முயன்ற போதிலும் அப்படி மாற்ற முயலும் காலத்தில் கூட அவற்ருல் அடையக் கூடிய நன்மைகளை அடைய முடியும்.

உதாரணமாக, மேனுட்டார் பலாத்காரத்தை உபயோகிப்பதில் பிரியமுடையவர்கள். நாமோ அஹிம்சா தர்மத்தை அனுஷ்டிக்க விரும்புகிருேம். அவர்கள் தங்கள் முறையால் நன்மை அடைய முயல்வதுபோல நாம் நம் முறையால் நன்மை அடைய முயல வேண்டும். வேறுபாடுகள் எல்லாம் வேறுபாடுகளேயன்றி, உயர்வு தாழ்வு குறிப்பன அல்ல என்பதை நாம் எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். உயர்வு தாழ்வு கற்பியாமலிருந்தால் எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

இந்த விஷயத்தில் என்னுடைய கருத்தைக் கூறுகிறேன். எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய அளவு சரியான கருத்து என்று கூறமாட்டேன். மகாத்மாவின் கருத்தும் இதுதான் என்றும் கூறமாட்டேன். ஆனல் இதுமட்டும் நிச்சயம். மகாத்மாஜி இத்தகைய கருத்துக்களைப் பொறுத்துக் கொள்ளுவார். வாழ்வின் சகல துறைகளைப் பற்றியும் மகாத்மா கூறும் கருத்துக்களையே அனுஷ்டிக்க வேண்டும் என்ற தவருன கருத்து ஒன்று உலவுகிறது. நான் ஒரு சமயம் சுற்றுப் பிரயாணம் செய்த காலத்தில் ஒரு ஊரில் அன்பர் ஒருவர் எனக்கு உணவு தர விரும்பினர். எனக்கு வேண்டாம் என்று கூறினேன். எனக்குப் பசியில்லாவிட்டாலும் உண்ண வேண்டும் என்று வற்புறுத்தினர். "ஆட்டுப் பால்

வைத்திருக்கிறேன், குடிக்கவேண்டும்'' என்று சொன்னர். "ஏன் நான் ஆட்டுப்பால் குடிக்கவேண்டும்'' என்று கேட்டேன். "மகாத்மாஜி ஆட்டுப்பால்தானே குடிக்கிருர்?'' என்று அவர் கூறினர். இதுபோல் மகாத்மா செய்வதுபோலவே எல்லாவிஷயங்களிலும் செய்யவேண்டும் என்ற எண்ணமுடையவர்களாக இருக்கிருர்கள் பலர். இதிலிருந்து மகாத்மாஜிக்கு நாட்டிலுள்ள செல்வாக்கு இவ்வளவு என்று விளங்குகிறது. கிருஷ்ணனைப் பற்றியும் கோபிமாரைப் பற்றியும் கதை கூறுகிருர்களே, அதுபோல் இருக்கிறது.

பரம்பரையாகத் தொழில் செய்து வரும் முறை இனிமேலும் நீடித்து நிற்கும் என்று நம்ப முடியாது. இனிமேலும் தகப்பன் தொழிலேயே மகனும் செய்யவேண்டும் என்று கூற முடியாது. அப்படிச் சொல்வது நம்முடைய ஜன சமூகத்துக்கு நல்லதுமில்லை. சிறு வயதிலிருந்தே பயிற்சி பெறவேண்டிய தொழில்களானல், தகப்பன் மகனுக்குச் சிறுவயது முதலே பயிற்சி அளிப்பான் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் அப்படிப் பயிற்சி அளிப்பது ஜாதிக் கட்டுப்பாட்டாலோ சமயக் கட்டுப்பாட்டாலோ அன்று. அந்த மாதிரியான கட்டுப்பாடுகளால் முற்காலத்தில் நன்மைகள் உண்டாயிருக்கலாம். ஆனல் அந்தக் கட்டுப்பாடுகளை இக்காலத்திலும் வைத்துக் கொண்டிருப்பது என்பது முடியாத காரியம்.

உண்பது என்பதைக் கவனியுங்கள். ஒருவர் பிறருடன் உண்பது தவறு என்று எண்ண இடமில்லை. அந்த வேறுபாட்டை நிலை நாட்டுவதால் பயனுமில்லை; சாத்தியமுமில்லை. யார் சமைத்தாலும், தொட்டாலும் நாம் உண்ணலாம். சுத்தத்துக்கு இது முரண்பட்டதல்லவா

என்று நீங்கள் எண்ணக் கூடும். சித்தம் பற்றிய விதிகள் வேறு; ஜாதி வேறுபாடு கூறி உண்ண மறுக்கும் விதிகள் வேறு. ஒரு குறிப்பிட்ட மனிதன் எப்பொழுதும் அசுத்த மாயிருப்பான் என்று எப்படிச் சொல்லமுடியும்? சிலரை எப்பொழுதுமே ஒதுக்கி வைத்துவிடுவோமானல் அவர்கள் நாளடைவில் அதிக அசுத்தமாகவே ஆகிவிடு வார்கள். இதோ, தோட்டிகள் இருக்கிருர்கள்; அவர் களுடன் பழகவும், அவர்களைத் தொடவும் செய்வோ மானல், அவர்கள் தங்கள் தவருன பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ள சந்தர்ப்பம் உண்டாகும். ஆதலால் நம்மை விடச் சுத்தக் குறைவாக உள்ளவர்களுடன் அடிக்கடி பழகுவது நம்முடைய கடமையாகும்.

சீர்திருத்தம் செய்வதனல் மனித அறிவுக்கு ஒத்த தாக இரண்டு வழிகள் உள. ஒன்று கெட்டவர்களைத் தனியாகப் பிரித்து வைப்பது; அதுதான் சிறை செய்யும் முறை. மற்றது கெட்டவர்களுடன் சேர்ந்து திருத்துவது. அதுதான் கல்வி முறையின் அஸ்திவாரம், தனியாகப் பிரித்து வைக்கும் முறை தான் ஜாதி என்பது. அது இனி மேல் பயன் படாது. ஆதலால் கலந்து வாழ்தல் என்னும் மற்ற முறையைக் கையாண்டு பார்க்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் சிலர் கூறுவார்கள், தீண்டாதவர்கள் மாமிசம் உண்பதால் அவர்களுடன் சேரக்கூடாது என்று. இதற்கும் பொருள் கிடையாது. இவர்களிடம் நாம் தாராள மனதுடையவர்களாக நடந்து கொண்டால்தான் அவர்களை திருத்த முடியும். ஒரு பையனுக்கு ஓடக் கற்றுக் கொடுக்க விரும்புகிறேம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது நாம் அவனுக்கு முன்னல் ஓடி விட மாட்டோம். அவன் கூடவே ஓட முயன்று அவனுக்குக் கற்பிப்போம். அது போல் தவருன

வழக்கங்கள் உடையவர்களைத் திருத்துவதற்கும் அவர்களை விட்டுவிட்டு முன்னால் போய்விடலாகாது. அப்படிப் போவது அன்பு முறையாகாது. தூரத்தில் நின்று கொண்டு பிறரை நம்மிடம் வரும்படி செய்யலாம் என்று எண்ணினால் அது அனுபவத்துக்கு ஒத்து வராது. சுத்தமாக இருக்க அறியாதவர்களுடன் சேர்ந்து பழகுவதை நம்முடைய கடமையாகக் கருதுகிறேன். அப்படி நாம் சேர்ந்து பழகினால் அவர்கள் வெகு சீக்கிரத்தில் திருந்தி விடுவார்கள். உயர்தர வாழ்க்கை வாழ்பவர்க்கு இதனால் சிறிது தீங்கும் நேரிடக்கூடும். ஆனால் ஜனசமூகம் முன்னேறவேண்டுமானால் இந்தச் சிறு தியாகம் செய்து தீர வேண்டியதுதான். ஆதலால் உடன் உண்ணல் என்பதற்கு ஆட்சேபம் எதுவும் இருக்க நியாயமில்லை. பல தொழில் செய்பவர்கள் தொழில் காரணமாகச் சேர்ந்து உண்ணலாகாது என்று கூறுவதற்கு நியாயம் ஏது? ஆசிரியர் வைத்தியருடன் உண்ணலாகாது என்று கூறுவது அசம்பாவிதமானது போலவேதான் பிராமணர் அம்பட்டருடன் உண்ணலாகாது என்று கூறுவது அசம்பாவிதமாகும். பிராமணர்தான் ஆசிரியர், அம்பட்டர் தான் வைத்தியர். அத்துடன் அம்பட்டர் தொடுவதை விட அதிமாக ஆபாசங்களை வைத்தியர் தொடுகிறார். அப்படியிருந்தும் வைத்தியருடன் உண்ணமாட்டேன் என்று யாரும் கூறுவதில்லை. என் அண்ணன் டாக்டராக இருந்தால் ஏன் என் தம்பி அம்பட்டராக இருக்கக் கூடாது? அம்பட்டர் பிறருடைய உடம்பில் சில பாகங்களைத் தொட மறுக்கலாம். அனால் டாக்டரோ அப்படி மறுக்க முடியாது. டாக்டரைச் சேர்த்துக் கொள்வதானால் அம்பட்டரையும் சேர்த்துக் கொள்ளவேண்டியதே. அதில் ஆட்சேபம் கூறுதல் ஆகாது. நம்மை இப்படிப் பிரித்து வைப்பதெல்லாம் நம்முடைய பழக்க வழக்க

வாசனையே யன்றி வேறன்று. ஒரு வேளை டாக்டர் பெறுகின்ற பணமானது அவரைச் சுத்தம் செய்து விடுகின்றதோ என்னவோ! அம்பட்டருக்கும் டாக்டருக்குக் கொடுப்பதுபோல அதிகப் பணம் கொடுத்தால் அம்பட்டரையும் சேர்த்துக் கொள்வோமோ என்னவோ!

ஆண்களும் பெண்களும் தங்கள் விருப்பம்போல் மணம் செய்துகொள்ளச் சுதந்திரம் உடையவர்களாக இருக்கவேண்டும் என்பதே என் உறுதியான நம்பிக்கை. இப்படிக் கூறுவதால் சிறுவர்களும் சிறுமிகளும் ஒருவரையொருவர் கூட்டிக்கொண்டு ஓடிவிடலாம் என்று கூறுவதாக எண்ண வேண்டாம். நான் கூறுவதெல்லாம் கல்யாணத்தைத் தீர்மானிக்கும்போது வயதானவர் விருப்பத்துக்கு மதிப்புக்கொடுப்பதைவிட மணமக்களின் விருப்பத்திற்கே அதிக மதிப்புக் கொடுக்கவேண்டும் என்பதேயாகும். அப்படியே தாய் தந்தையர் தீர்மானம் செய்வதாயிருந்தாலும் அவர்கள் ஜாதியைப் பிரதானமாக வைத்துத் தீர்மானம் செய்யக் கூடாது. மணம் என்பதெல்லாம் ஒரு விதமான நட்புமுறையேயன்றி வேறன்று. இரண்டு நண்பர்கள் கூட்டுமுறையில் வாழ்க்கை நடத்த விரும்புகிறார்கள் என்பதே அதன் பொருள். ஜாதி வேறுபாடு பாராமல் இருந்தால் நண்பர்களாகவும் இருக்க முடியும். கூட்டுமுறையில் வாழ்க்கை நடத்தவும் முடியும். இது வரை ஜாதிக் கட்டுப்பாடு,மணவினையைப் பாதித்து வந்ததுபோல் இனிமேலும் பாதித்துவர முடியாது. என் விருப்பம்போல் உண்ண எனக்குச் சுதந்திரம் உண்டு என்று கூறினால் உண்ணத் தகாததை யெல்லாம் உண்ணலாம் என்று பொருள் படாது. சுதந்திரம் உண்டு என்று கூறினால் உடனே என்ன தவறு வேண்டுமானாலும் செய்யலாம் என்று அர்த்தமாகாது. அதன் பொருளெல்லாம் ஆண்களும் பெண்களும் தாங்கள்

உண்மையாகவே எதை நன்மை என்று கருதுகிறார்களோ அதன்படி நடக்கச் சம்மதிக்கிறோம் என்பதேயாகும்.

மணம் என்பது ஒரு முக்கியமான விஷயம். வாழ்க்கை முழுவதையும் பாதிக்கும் விஷயம். இருவருடைய வாழ்க்கையும் இன்பகரமாக இருக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடனேயே அதில் இறங்கவேண்டும். மற்றபடி சர்வசுதந்திரம் அளிக்கவேண்டும். இதுவே நான் கூறுவது. சாதாரணமாகத் தொழிலாளிகள் தங்கள் தொழிலைத் தங்கள் குழந்தைகட்கும் கற்றுக் கொடுக்கவேண்டும் என்றே விரும்புவார்கள். ஆதலால் தாயும் தந்தையும் ஒரே தொழில் வகுப்பைச் சேர்ந்தவர்களாகவே இருப்பார்கள். இப்படிக் கூறுவதால் இவர்களிடையே சுதந்திரம் இருக்கக்கூடாது என்று அர்த்தமில்லை. ஜனங்கள் எப்போதும் போல் ஜாதிக்குள்ளேயே தான் மணம் செய்து கொள்வார்கள். உடனேயே புரட்சி உண்டாகி விடமாட்டாது. ஆனால் ஜாதி விட்டு மணம் செய்ய விரும்புகிறவர்களுக்கும் இடமிருக்கவேண்டுமென்பதே என் கருத்து.

இந்த சுதந்திரத்தை ஏற்படுத்துவது எப்படி? நான் உங்களிடம் செய்துகொள்ளும் வேண்டுகோள் எந்தச் சேவை செய்தாலும் அன்பு நெறியினின்றும் அணுவளவு கூடப்பிறழாதீர்கள்; சண்டை சச்சரவு வழியைப் பின்பற்றாதீர்கள். எது சரி எது தவறு என்று ஆராய்ந்து தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். "நான் செய்யக்கூடிய பெருந் தவறு என்சகோதரனைப்பகைப் பதுதான்" என்று தெளிவாக அறிந்து கொள்ளுங்கள்; எத்துணை நல்ல சீர்திருத்தமாயினும் அதைச் செய்து முடிக்க பலாத்காரத்தை உபயோகிக்காதீர்கள். அறிவு புகட்டும் வழியையே பயன்படுத்துங்கள். நாம் மாறுதல் செய்யவேண்டியது அவசியந்தான். ஆனால் ஏற்கெனவே உள்ள கஷ்டம் போதும்.

இதைவிட அதிகக் கஷ்டத்தை உண்டாக்கி விடாதீர்கள். பலாத்காரம் மூலமாகத்தான் மாறுதல் செய்யமுடியும் என்று எண்ணுவதற்குக் காரணம் மனிதப்பண்பில் நம் பிக்கையில்லாததே யாகும். நாம் பலவீனமாக இருக்கும் பொழுதுதான் பலாத்காரத்தைப் பற்றிச் சிந்திக்கிறோம். நீங்கள் தவறான காரியம் செய்தால்கூட நான் உங்களிடம் அறிவு புகட்டும் முறையையே கையாண்டு வந்திருப் பதை அறிவீர்கள். உதாரணமாக யாரேனும் புகை குடித்தால் அது தீயது என்று அறிவு புகட்டவே முயன்று வந்திருக்கிறேன். இதே போல்தான் சமூக பழக்கவழக் கங்கள் விஷயத்திலும் நடந்து கொள்ளவேண்டும். குழந் தைகள் பாடம் படிக்காவிட்டால் பலாத்காரம் உபயோகிப் பதால் யாதொரு பயனும் ஏற்படாது. அன்பினால்தான் அவர்களைத் திருத்தவேண்டும். ஆகவே என் கருத்துக்கு நீங்கள் மதிப்புத் தருவதானால் அன்பு முறையினால் சமூக சீர்திருத்தங்களைச் செய்யவேண்டும் என்று நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

தற்சமயம் ஜனங்கள் பிராமண வகுப்பாரிடம் அளவு கடந்த துவேஷத்தைக் காட்டுகிறார்கள். அது வருந்தத் தக்கது. நானும் அந்த விதமாகத் துவேஷத்துக்குப் பாத்திரமாயுள்ள பிராமண வகுப்பையே சேர்ந்தவன். எந்தக் குறிப்பிட்ட வகுப்பாரிடமும் துவேஷம் கொள்வது சரியான வழியாகத் தோன்றவில்லை. நான் அந்த வகுப்பைச் சேர்ந்தவனாயிருப்பதால் கடுமையான மொழி களை உபயோகிக்கவில்லை. இப்படித் துவேஷம் காட்டுவது நல்ல தன்று. அதை ஜனங்கள் தங்கள் அனுபவத்தி லிருந்தே தெரிந்து கொள்ள விட்டுவிட வேண்டும். ஆயினும் நீங்கள் என்னுடன் நெருங்கிப் பழகியவர்கள்; என்னுடன் சேர்ந்து உழைப்பவர்கள். ஆதலால் நீங்கள் சமூக சீர்திருத்த விஷயத்தில் அன்பு முறையையே

கையாளவேண்டுமென்று விரும்புகிறேன். இந்த விஷயத்தில் ஏற்பட்டுள்ள துவேஷமும், பகைமையும், நம்பிக்கையின்மையும் அபரிமிதம். நீங்கள் அவற்றிற்கு இரையாகிவிடக் கூடாது என்று விரும்புகிறேன். நீங்கள் என்னை நம்புவதாயிருந்தால், நீங்கள் பரஸ்பரம் நம்பிக்கை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்றும் நான் குறிப்பிட்ட அபாயத்தில் அகப்பட்டுக் கொள்ளாதிருக்கவேண்டுமென்றும் விரும்புகிறேன். வைதீகர் ஒருவர் உங்களுடன் உண்ண விரும்பவில்லை என்று வைத்துக்கொள்வோம். அதற்காக அவரை கஷ்டப்படுத்துவதிலும் பயனில்லை. அவரை ஏமாற்றியோ பலவந்தப் படுத்தியோ உங்களுடன் உட்கார்ந்து உண்ணும்படி செய்வதிலும் பயனில்லை. நீங்கள் நடந்துகொள்ளும் மாதிரியைப் பார்த்தே அவரும் தமது வழியைத் திருத்திக்கொள்ளும்படி செய்யவேண்டும். நம்முடைய வாழ்க்கை முறையே தான் அவரைத் திருத்தவேண்டும். பலவந்த முறையைக் கையாள்வதாயிருந்தால் முஸல்மான்கள் மத மாற்றம் செய்வதற்காகக் கையாளும் தவருன முறையைக் கையாள்பவர்களாவீர்கள். இப்பொழுது கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும் பலவந்த முறையைக் கையாள்வது தவறு என்று வருந்துவதுடன், அதை விட்டுவிடவும் செய்திருக்கிருர்கள். இந்த மாதிரி விஷயங்களில் பலவந்த முறையால் பயனில்லை என்பதை உலகம் முழுவதும் அறிந்துகொண்டுவிட்டது. ஒருவர் நம்முடைய கருத்துக்கு மாருனகருத்துடையவராக இருக்கிருர் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவருக்கு ஜாதியொழிப்பிலும், மண சுதந்திரத்திலும் நம்பிக்கையில்லை என்று வைத்துக்கொள்ளுங்கள். நாம் அவரை முட்டாள் என்று கருதலாம்; ஆனுல் அதற்காக அவரை வெறுக்க வேண்டிய அவசியமில்லை. அப்படி யில்லையானுல் நாம்,

'சமூக சீர்திருத்தவாதிகள்' என்ற பெயருடன் ஒரு புதிய ஜாதியை சிருஷ்டிப்பவர்களாவோம். பலவந்த முறையைக் கையாள்வதாயினும் புதிய ஜாதியை சிருஷ்டிப்போமே யன்றி, பழைய ஜாதியை ஒழிக்கமாட்டோம். நம் எண்ணம் நிறைவேருமல் போகும்.

மாவை சுடுதண்ணீரில் கரைக்க வேண்டுமானல் என்ன செய்யவேண்டும்? மாவின் மீது சுடு தண்ணீரை அப்படியே மொத்தமாக ஊற்றினுல் மாவு கரையாது, கட்டியாகப் போய் விடும். அதனுல் முதலில் குளிர்ந்த நீரில் கலந்து கொண்டு பிறகு மெதுவாகச் சிறிது சிறிதாக சுடு தண்ணீரைக் கலந்தால் மாவை சுடு தண்ணீரில் கரைத்து விடலாம். ஆகவே பலவந்த முறையால் எதையும் சாதிக்கமுடியாது. அறிவு புகட்டும் முறையால்தான் முடியும். இந்த உவமை மாவுக்கும், சுடு தண்ணீருக்கும் பொருந்துவது போலவே மக்கள் மனத்துக்கும் பொருந்தும்.

அன்பு முறை விரைவாகப் பயன் தராது. பகைமை முறை தான் விரைவாகப் பயன் தரும் என்று எண்ண வேண்டாம். அன்பு முறையும், அறிவு புகட்டும் முறையும் தான் பலன் தரும் வழி. வேறு கிடையாது. பகைமை வழியும், பலவந்த வழியும் தோல்வியுறுமே யன்றி வெற்றி பெருது. நன்ருக ஆராய்ந்து பார்த்தால் அன்பு முறை தான் அதி விரைவில் பயன் தருவதாகும். சமூக சீர் திருத்தம் விரும்புவோர் கூறும் பல விஷயங்களை நான் ஒத்துக் கொள்கிறேன். அதே சமயத்தில் அவர்களுக் எனக்கு முள்ள வேறுபட்ட கருத்துக்களையும் கூறி விட்டேன்.

கேள்வியும் பதிலும்

காந்தியடிகள்

குதிரைப் பந்தயம்

கேள்வி:- "குதிரைப் பந்தயத்திற்காகத் தனி ரயில் விடுகிருர்கள். காந்தித் தொப்பி வைத்துக் கொண்டு, காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களும் அங்கே போய்ப் பணத்தைப் பாழாக்குகிருர்கள். இந்தப் பணம் எங்கிருந்து வந்தது? குதிரைப் பந்தயச் சூதாட்டம் குடிப் பழக்கத்தை விடக் குறைந்த தீமை யன்று. இப்பொழுது பொதுஜன ஆதரவுள்ள மந்திரி சபைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனுல் அவர்களும்கூட இந்தத் தீமையைப் பார்த்துக் கொண்டுதான் இருக் கிருர்கள்."

பதில்:- குதிரைப் பந்தயச் சூதாட்டத்தை மதுபா னத்தைப் போன்ற தீமையுடையதாக நான் கருத வில்லை. ஆயினும் இரண்டையும் ஒப்பிட்டுப் பார்ப்பது சரி யன்று. குறைந்த தீமை என்பதால் சூதாட்டம் நல்லதாக ஆகிவிடாது. குதிரைப் பந்தயத்தின் நுணுக் கங்களை எல்லாம் நான் அறியேன். நான் சொல்லக்கூடிய தெல்லாம் இந்தத் தீமையை ஒழித்துவிடப் பொதுஜன அரசாங்கத்துக்கு அதிகாரம் இருக்குமானுல், அவர்கள் நிச்சயம் அப்படிச் செய்யவேண்டும் என்பதே யாகும்.

புகைப் பிடித்தல்

கேள்வி:- மதுவிலக்கைப் பற்றித் தாங்கள் அடிக்கடி எழுதி வருகிறீர்கள். ஆனுல் புகை பிடிப்பதைப் பற்றி

அடிக்கடி எழுதவு மில்லை; எழுதுங் காலத்தில் மது விலக்கை வற்புறுத்திக் கூறுவதுபோல கூறவுமில்லை. இந்தத் தீய பழக்கம் அச்சம் தரும்படியான விரைவோடு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. குழந்தைகளும்கூட நாளுக்கு நாள் அதிகமாக அதில் ஈடுபட்டு வருகிறார்கள். தரித்திரமான இந்த நாட்டில் அந்தப் பணத்தைக் கொண்டு எவ்வளவோ நல்ல காரியங்கள் செய்யலா மல்லவா?

பதில்:- இந்தக் குற்றச் சாட்டு உண்மைதான்; ஆனால் புதிதன்று. நான் மதுவிலக்கை வற்புறுத்துவது போல இதை வற்புறுத்தாதற்குக் காரணம் புகைபிடிப்பது ஒரு பெரிய நாகரிகமாக ஆகி விடுமானால், அதை இல்லா மல் ஒழித்து விடுவது கஷ்டமான காரியம். ஆயினும் பிறருக்குக் கஷ்டம் கொடுக்கும் அந்தத் தீய வழக்கத்தை ஒழிப்பதற்காகக் கிளர்ச்சி செய்ய வேவேண்டும். ஆனால் எப்படிச் செய்வது? எப்பொழுது செய்வது என்பதுதான் கேள்வி. அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல அசக்தனாய் இருக்கிறேன்.

நியாயமில்லாத செயல்

கேள்வி:- (குடகு தேசத்திலுள்ள மெர்க்காரா பட்டணத்திலிருந்து ஒருவர்) "கிராம தேவதைகளுக்குப் பலி யிடுவது தவறு என்று வாலிபர்கள் அதில் கலந்து கொள் ளாதிருக்கிறார்கள். அப்படியானால் உங்களை நாங்கள் பகிஷ்கரித்து விடுவோம் என்று கிராமத்து ஜனங்கள் பயமுறுத்துகிறார்கள். இந்தச் சீர்திருத்தவாதிகள் செய்ய வேண்டியது யாது?"

பதில்;- சீர்திருத்த வாதிகளுடைய காரியம் எப்பொழுதும் கஷ்டமானதுதான். பகிஷ்கரிப்பதாகப் பயமுறுத்துவதைக் கண்டு அவர்கள் பயந்துவிடக்

கூடாது. பகிஷ்காரத்தால் ஏற்படக்கூடிய துன்பங்களை யெல்லாம் சகித்துக் கொள்ளத் தயாராய் இருக்க வேண்டும். கிராமத்து மக்கள் தங்கள் மூடப் பழக்கங் களில் உண்மையாகவே நம்பிக்கை உடையவர்கள். அதனுல் அவர்களிடம் சீர்திருத்த வாதிகள் கோபம் கொள்ளலாகாது. மக்களுக்கு அறிவு புகட்டவே வேண்டும். கிராம தேவதைகள் என்று எந்த தேவதை யும் கிடையாது. எல்லாம் கிராமத்து மக்களுடைய எண்ணமே யன்றி வேறன்று. சீர்திருத்தவாதிகள் பகிஷ்காரத்தைப் பொருட் படுத்தாமல், இடைவிடாமல் கிராமத்து மக்களுக்கு விஷயத்தை விளக்கிக் கொண்டும், அவர்களுக்குத் தேவையான சேவைகளைச் செய்து கொண்டும் இருக்கவேண்டும். பொறுமையும் விடாமுயற் சியும் மலை போன்ற கஷ்டங்களை யெல்லாம் தகர்த்து விட முடியும். சீர்திருத்த வாதிகள் போலீசார் உதவியை நாடலாகாது.

சேவையும் தெய்வ வணக்கமும்

கேள்வி:- கடவுளை வணங்குவதற்காகச் செலவு செய்யும் நேரத்தை ஏழைகளுக்குச் சேவை செய்வதற் காகச் செலவு செய்தால் நலமாயிருக்கு மல்லவா? உண் மையான சேவை செய்பவருக்குப் பக்தி சிரத்தையுடன் கடவுளை வணங்குவது அவசியமில்லை யல்லவா?

பதில்:- இந்தக் கேள்வியில் தெய்வ உண்மையில் சந்தேகமும் மனச் சோம்பலும் காணப்படுகின்றன. கர்மயோகிகளில் தலை சிறந்தவர்கள்கூட தேவாரம் ஓது வதையோ, தெய்வத்தை வழிபடுவதையோ ஒரு நாளும் விட்டுவிடுவதில்லை. பிறருக்கு உண்மையான சேவை செய்வதே கடவுள் வழிபாடு என்றும், அப்படிச் சேவை செய்கிறவர்கள் தேவாரம் ஓதுதல் போன்ற தெய்வ வழி

பாடுகளில் ஈடுபடவேண்டிய அவசியமில்லை யென்றும் லட்சிய ரீதியாகக் கூறலாம். ஆனால் அனுபவத்தில் பஜனை முதலியன உண்மையான சேவைக்கு உதவியாய் இருக்கின்றன. பக்தர்களுடைய உள்ளத்தில் கடவுள் ஞாபகத்தை வைத்திருப்பதற்கும் உதவி செய்கின்றன,

தசரத ராமன்

கேள்வி:- (ஆர்ய சமாஜத்தைச் சேர்ந்த ஒருவர்) ராமனை அமரன் என்று கூறுகிறீர்கள். அப்படியானால் எப்படி அவன் தசரதனுடைய புத்திரனும் சீதையினு டைய கணவனுமாக இருக்க முடியும்? நான் தங்கள் பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு வரும்போதெல்லாம் இந்த சந்தேகம் உண்டாகிறது. தாங்கள் ராம நாம பஜனையை எல்லோரும் கலந்து கொள்ளக்கூடிய விதமாகச் செய்ய முடியாதா?

பதில்:- எல்லோரும் என்பதன் பொருளை ஏற் கெனவே விளக்கியிருக்கிறேன். முழு மனத்துடன் தாளம் பிசகாமல் பஜிக்கக் கூடியவர்கள் எல்லோரும் அதில் கலந்து கொள்ளலாம். மற்றவர்கள் மௌனமாக இருக்கவேண்டும். இது ஒரு சிறிய விஷயம்.

முக்கியமான விஷயம் யாதெனில் தசரதர் புத்தி ரனான ராமனை எப்படி அமரன் என்று கூறலாம் என்பதேயாகும். இந்தக் கேள்வியைத் துளசிதாஸ் முனிவர் தாமே எழுப்பி, தாமே பதில் கூறியிருக்கிறார். அந்தப் பதில் அறிவு பூர்வமாக ஆராய்ச்சி செய்ய இடந் தராது. இருதயத்தினால் மட்டுமே அதை அறியமுடியும்.

முதன் முதலாக ராமனைச் சீதையின் கணவனாகவே வணங்கி வந்தேன். என்னுடைய அறிவும் அனுபவமும் வளர்ச்சி யடைந்த பிறகுதான் ராமனை அமரனாகவும், எங்குமுள்ளவனாகவும் எண்ண ஆரம்பித்தேன். இதைக்

கொண்டு சீதையின் கணவனாக இருந்த ராமன், பிறகு அதைவிட உயர்ந்த ராமனாக ஆகிவிட்டான். இப்படித் தான் உலகம் முன்னேறுகிறது. ராமனை எங்கு முள்ளவ னாகக் கருதமுடியாது. ஆனால் ராமனைக் கடவுளாக எண்ணுகிறவர்களுக்கு, ராமன் எங்குமுள்ளவனாக இருப் பதுபோலவே, அவனுடைய தந்தையும் எங்குமுள்ளவ ராகி விடுவார். தந்தையும் மகனும் ஒன்றாய் ஆய்விடுவார் கள். இதெல்லாம் வெறும் கற்பனை என்று சொல்லக் கூடும். அதற்கு எனது பதில், நம்பிக்கையின் அளவே ஞானமுண்டாகும் என்பதே.

லெனின் கடிதம்

அன்புள்ள ஏ. எம்.

நீ என்ன இப்படி ஆகி விட்டாய்? சகிக்கக்கூட வில்லையே. 'லிக்விடேட்டர்' என்ற பத்திரிகையில் நீ எழுதியுள்ள ஒரு கட்டுரையை இன்று பார்த்தேன். அதில் நீ பின் வருமாறு குறிப்பிட்டிருக்கிருய்:-

"கடவுளைத் தேடுவது அல்லது கடவுளை அடைவது என்பதைக் கொஞ்ச காலத்திற்குத் தள்ளி வைக்க வேண்டும். அது பிரயோஜன மற்ற வேலை. இல்லாத ஒன்றைத் தேடுவதில் அர்த்தமே யில்லை. எவன் அறு வடை செய்ய வில்லையோ அவன் நாற்று நடவும் இல்லை. கடவுள் இல்லை. அந்தக் கடவுளை நாம் இன்னும் சிருஷ்டி செய்யவில்லை. உலகம், கடவுளர்களை நாடிச் செல்வதில்லை; கடவுளர்களைச் சிருஷ்டி செய்கிறது. வாழ்க்கையை நாம் நினைப்பதில்லை; அதனைச் சமைக்கிருேம்."

இதனுல், தாற்காலிகமாகத் தான் கடவுளை அடைவதை நீ எதிர்க்கிருய் என்று தெரிகிறது. தவிர, கடவுளைச் சிருஷ்டிக்க வேண்டும் என்பதற்காக நீ, அடைவதை எதிர்க்கிருய். இல்லையா?

உன்னுடைய இந்த வழி எந்த இடத்தில் கொண்டு போய் விடும் என்று நினைக்கிறபொழுது எவ்வளவு பயமாயிருக்கிறது?

கடவுளை அடைவதற்கும், கடவுளைச் சிருஷ்டி செய்வதற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதென்ருல்,

மஞ்சள் பிசாசுக்கும் நீலப்பிசாசுக்கும் எவ்வளவு வித்தியாசமோ அவ்வளவு வித்தியாசம்தான்.

கடவுளைச் சிருஷ்டி செய்கிற தொழில் இருக்கிறதே அது தன்னைத் தானே இழிவுபடுத்திக் கொள்கிற வேலையில்லையா? எவனொருவன் கடவுளை நிர்மாணிக்கிற வேலையில் இறங்கியிருக்கிறானே, அவன் தன் மானத்தை மறைத்துக் கொள்பவன் ஆகிறான். ஏனென்றால் அவன் வேலை செய்வதில்லை. தன்னைப் பற்றியே சிந்தனை செய்துகொள்ள ஆரம்பிக்கிறான். இதனால் தன்னிடத்தேயுள்ள அசுத்தமான மூடத்தனமான, சிறுமை எண்ணங்களுக் கெல்லாம் தெய்வத் தன்மை புகுத்தினவனாகிறான். இந்தக் கடவுளை நிர்மாணிக்கிற வேலை யிருக்கிறதே, இது வியாபாரிகளின் மந்த புத்தியிருந்து எழுந்த ஒரு சமூக விஷமாகப் பரவி யிருக்கிறது.

நான் மீண்டும் மீண்டும் உன்னுடைய கட்டுரையைப் படித்து, நீ எப்படி இந்தத் தவறான வழியில் சென்றுவிட்டாய் என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்.

உன்னுடைய

வி. உலியனாவ்

சர்வதேச பூபௌதிக ஆராய்ச்சி

பிரபஞ்ச இரகசியங்களை அறியும் நோக்கத்துடன் உலகவிஞ்ஞானிகள் சர்வதேசரீதியில் திட்டமிட்டு தகவல்களைச் சேகரித்து வருகிறார்கள். தகவல் தொகுப்புக்காக கால நிர்ணயம் செய்து கொண்டிருப்பதையே பூபௌதிக ஆண்டு என்று குறிப்பிடுகிறோம். நடப்பு பூபௌதிக ஆண்டு இன்னும் மூன்று மாதங்களில் நிறைவு பெறும். சேர்ந்துள்ள தகவல்களை வகைப்படுத்தி, ஆராய்வது மாபெரும் பணியாகும்-அதற்கு பல ஆண்டு உழைப்புத் தேவைப்படலாம்.

பிரிட்டிஷ் விஞ்ஞானிகள்,திட்டமிட்டபடி செயலாற்றி வருகிறார்கள், ஒரு குறிப்பிட்ட விஷயம் பற்றி ஒரே சமயத்தில், உலகின் பல பாகங்களில் தகவல்களைச் சேகரிப்பதுதான் இந்தப் பணியிலுள்ள முக்கிய அம்சம். உலகின் பல பாகங்களிலுள்ள விஞ்ஞானிகளுடன் தொடர்புகொண்டு, இசைவாகப் பணியாற்றுவது எளிதல்ல. உதாரணமாக சூரியனிலுள்ள கரும்புள்ளி பற்றியோ, பிரயை பற்றியோ தகவல் தொகுப்புப் பணியை எடுத்துக் கொள்வோம். இந்தப் பணியை பிரிட்டிஷ் கடற்படையில் பணியாற்றிய ஸர். அர்ச்சி பால்டு டே ஏற்றுக்கொண்டார். உலகின் பல பாகங்களிலுள்ள நிலையங்களுடன் தொடர்பு கொண்டு பல வேறு அம்சங்களில் தகவல்களைச் சேகரித்து வருகிறார். இதே போல, பூமியின் ஈர்ப்புச் சக்தியை பல இடங்களில் அளவெடுத்து வருகிறார்கள். இந்த ஆராய்ச்சி நிறைவு

பெற்ருல், பூமியின் உருவத்தையும் அமைப்பையும் பற்றி பல புதிய செய்திகள் கிடைக்கும். இந்தப் பணியிலும் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் பங்கெடுத்துக் கொண்டிருக்கிருர்கள். இவர்கள் கஷ்டங்களைப் பொருட் படுத்தாமல், தென்துருவ மண்டலத்திலும் செஷயரிலுள்ள உப்புச் சுரங்கத்திலும், வேறு பல இடங்களிலும் ஆய்வுச் சோதனைகளை நடத்தினர்கள்.

வாயு மண்டலத்தில் மேலே போகப் போக காற்றின் நிலைபற்றியும், பரவெளியின் நிலைபற்றியும் தகவல்களைத் தொகுப்பது ஓர் திட்டம். இதற்காகவே அமெரிக்காவும் ருஷ்யாவும் செயற்கைக் கோள்களை சுழல விட்டன. பிரிட்டன், செயற்கைக் கோள்களை கட்ட வில்லை என்ருலும் பிறநாடுகளுக்கு உதவ, முன் வந்தது. செயற்கைக் கோள்களின் நிலையை, அவ்வப்போது அறிந்தால்தான், அவை விடுக்கும் செய்திகளுக்கு சரியான முறையில் பொருள்கொள்ள முடியும்.

செயற்கைக் கோள்களின் சஞ்சாரத்தை அறிந்து கூற, மான்செஸ்டருக்கருகில் நிறுவப்பட்ட ஜோட் ரெல் பாங்க் ரேடியோ டெலஸ்கோப் நிலையமும், பான்பரோவிலுள்ள ராயல் விமான நிலையமும் பெரிதும் உதவின. சாதாரண தூரதரிசினிக்குத் தென்படாத தாரகைகளையும் கிரகங்களையும் காணவல்லது ஜோட் ரெல்பாங்க் ரேடியோ டெலஸ் கோப். வேறு எந்த நாட்டிலும் இம் மாதிரிச் சாதனம் இல்லை. சந்திரனை நோக்கி எய்யப்பட்ட அமெரிக்க ராகெட்டின் போக்கைக் கவனிக்க இந்த நிலையத்தார் தயாரானர்கள். ஆனல் அமெரிக்க முயற்சி வெற்றி பெறவில்லை. அவர்கள் மீண்டும் முயன்ருல், அதைப் பற்றிய தகவல்களை, ஜோட்ரெல்பாங்க் ரேடியோ டெலஸ் கோப், பதிவு செய்யும்.

வெளிமண்டல ஆராய்ச்சியிலும் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் ஈடுபட்டிருக்கிருர்கள். பூமிக்கு பல மைல்கள் உயரத்திலுள்ள அழுத்த நிலைபற்றி பல தகவல்களைச் சேகரித்திருக்கிருர்கள். இதற்காகப் பலதடவைகளில் ஆகாயத்தில் வாணவெடிகளை அனுப்பினுர்கள். சென்ற ஏப்ரலில், ஊமராங்கிலிருந்து (ஆஸ்திரேலியா) 'ஸ்கை லார்க், என்ற வாணவெடி அனுப்பப்பட்டது. அது சுமார் 50 மைல்கள் உயரத்திற்குச் சென்றது.

பூபௌதிக ஆண்டின் ஒவ்வோர் ஆராய்ச்சியிலும் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் பங்கெடுத்துக் கொண்டிருக்கிருர்கள். சூரிய பிரயை பற்றி தகவல் சேகரித்தல், காஸ்மிக் கிரண ஆராய்ச்சி, பனிப்பாறைகளைப்பற்றிய தகவல் தொகுப்பு, சூரியப் புள்ளி பற்றி தகவல் சேகரிப்பு என பல பணிகளில் ஈடுபட்டிருக்கிருர்கள்.

பூபௌதிக ஆண்டு ஆராய்ச்சியால் கிடைக்கும் தகவல்கள் அனைத்துக்கும் உடனடியாகப் பயனுண்டு என்று கூறுவதற்கில்லை. பல தகவல்கள், சித்தாந்தங்களை உறுதிப்படுத்த உதவக்கூடும்; பல தகவல்களால் புதிய ஆராய்ச்சித் துறைகள் ஏற்படும்.

வெளிமண்டல ஆராய்ச்சியால் உடனடியாகப் பயன் உண்டு. இதனுல் பருவநிலைபற்றி ஹேஷ்யங் கூறமுடியும். ரேடியோ தந்தித் தொடர்பில் பல அபிவிருத்திகளைச் செய்ய முடியும். துல்லியமாக பருவநிலை ஹேஷ்யம் கூறுவதும் தெளிவாக ரேடியோச் செய்தி அனுப்புவதும், விமானப் போக்கு வரத்துக்கும் கப்பற் போக்கு வரத்துக்கும் பெரிய உதவியாகும்.

வேதாந்தம் என்ருல் என்ன ?

ஓலாப் ஸ்டேபிள்டன்

நான் எப்போதும் வாழ்ந்து கொண்டிருப்பேனு? நான் யார்? நான் சுதந்திரமுள்ளவனு அல்லது இயந்திரமா? கடவுள் என்ற ஒருவர் இருக்கிருரா? நல்லதே முடிவில் வெல்லுமா? அத்தன்மையதா இவ் வகில உலகம்? நன்மை என்பதுதான் என்ன? தனி மனிதனுக்கும் சமூகத்திற்கும் சரியான உறவு எது? நம் வாழ்க்கையிலே நாம் செய்ய வேண்டிய கடமை என்ன? 'கடமை' என்பதன் உண்மையான அர்த்தம் என்ன? வாழ்வு என்பதுதான் என்ன?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் தெளிவான பதிலைப் பெறுவதற்காகத்தான், பெரும்பாலும், முதன் முதலாக, ஒரு மனிதன் வேதாந்த சாஸ்திரங்களை நாடுகிருன்; ஓர் இந்தியர் என்னிடம் பேசுகையில், "மனிதர்கள் சாவுக்குப் பிறகும் வாழ்கிருர்களா என்று கண்டு பிடிப்பதுதான் வேதாந்த சாஸ்திரத்தின் ஒரே நோக்கமாய் இருக்க வேண்டும். அவர்கள் அப்படி வாழவில்லை யென்ருல், இந்த வாழ்க்கையை வாழ்ந்து பயனில்லை" என்ருர்.

சாவுக்குப் பிறகு மனிதன் வாழ்வது அவசியமென்றும், அதைக் கண்டு பிடிப்பதே வேதாந்த சாஸ்திரத்தின் வேலை யென்றும் அந்த நண்பர் நினைத்தது தவறு என்று கருதுகிறேன். ஆனல் ஒரு விஷயத்தில் அந்த நண்பரின் அபிப்பிராயம் சரி. மனிதர்களின் பிரத்தியட்சத்

தேவைகளை ஒட்டியதாகவே இருக்க வேண்டும் வேதாந்தம். நாம் வாழ்வை வாழ்வதற்கு அது உதவி புரிய வேண்டும்; நாம் வாழும் பிரத்தியட்ச உலகுக்கு இசைய, நமது நடத்தையைச் சிறப்புற அமைத்துக் கொள்ள, வேதாந்தம் நமக்கு உதவவேண்டும்.

"மரணத்துக்குப் பிறகு வாழ்வு" என்ற விஷயம் உண்மையா அல்லவா என்று கண்டு பிடிப்பதொன்றே வேதாந்த சாஸ்திரத்தின் வேலை என்று அவர் நினைத்தது தவறு. வேதாந்த சாஸ்திரத்தினால் திட்டமானதொரு பலன் வேண்டும் என்று அவர் கருதியது நியாயம்;

வேதாந்தம் என்பது வாழ்வை வாழும் ஒரு வகை. அது வெறும் அறிவுக்கட்டுப் பாடன்று, மிகக் கடுமையானதோர் அறிவுக் கட்டுப்பாடும் வேதாந்தத்தில் அடங்கித்தான் இருக்கிறது. ஆனால் எவ்வளவு கடுமையாய், எவ்வளவு நுட்பமாய், எவ்வளவு மனப்பூர்வமாய அறிவுப் பயிற்சி நடந்தாலும், 'வேதாந்தம்' என்ற சொல்லின் முழு அர்த்தத்தில் அது வேதாந்தமாகி விடாது.

முழு உலகத்தையும் எப்படிப் பாவிப்பது என்று மனம் செய்து கொள்ளும் ஒரு பாவனையே வேதாந்தமாகும்.

'வேதாந்தம்' என்பது மனிதனது மனத்திலே பூசிய ஒரு வர்ணமாகும். அந்த வர்ணம், அந்தத் தனி, மனிதனின் அனுபவ வாழ்க்கை முழுவதையும் பாதிக்கும். அந்த வாழ்க்கைக்கு ஒரு தெளிவையும், ஓர் இசையையும் ஊட்டி. இடையருது வழிகாட்டிச் செல்லும். வேறு எதனாலும் இது சாத்தியமாகாது.

வேதாந்தம் என்பது ஞான வேட்டையாகும்; ஞானத்தைத் தேடுவதுமாகும். ஞானத்திலோ கருமமும்

அடங்கியிருக்கிறது. சகல விஷயங்களையும் அறிந்தவனுய், ஆனல் ஒன்றுமே செய்யாதவனுய் இருக்கும் மனிதன் வேதாந்தி யல்லன்.

வேதாந்த பரமான தியானம், அதற்கு அப்பாற்பட்டதொரு பொருளைச் சுட்டிக் காட்டியே தீர்கிறது. வாழ்க்கையை எப்படிப் பாவிக்க வேண்டுமென்ற ஒரு பாவனையை அது காட்டுகிறது; நாம் வாழும் இவ்வுலகில் உலகினிடம் நம்மைப் போன்ற மக்களை எப்படி நடந்து கொள்வது பொருத்தமென்று அது காட்டுகிறது.

கொய்த மலர்கள்

பிரார்த்தனை

அவனே அகல் ஞாலம் படைத்து இடந்தான்
அவனே அஃது உண்டு உமிழ்ந்தான் அளந்தான்
அவனே அவனும் அவனும் அவனும்
அவனே மற்று எல்லாமும் அறிந்தனமே.

அகன்ற உலகத்தை யெல்லாம் படைத்தவனும், பிரளயத்திலே முழுகி உலகத்தை இடந்து எடுத்தவனும் அவனே யாவன்; அவ்வுலகத்தை எல்லாம் உண்டவனும் உமிழ்ந்தவனும் அளந்தவனும் அவனே யாவான்; பிரமனும் சிவனும் இந்திரனும் அவனே யாவன்; மற்றும் உள்ள எல்லாப் பொருள்களும் அவனே யாவன்; இவ்வுண்மையை நாம் அறிந்தோம்.

—மூன்ருந் திருவாய் மொழி

புகழ்ச்சியும் இகழ்ச்சியும்

மனிதர்கள் புகழ்வதும் சீக்கிரம், இகழ்வதும் சீக்கிரம். ஆதலால் மற்றையோர் உன்னைப் பற்றிச் சொல்லும் வார்த்தைகளைக் கவனியாதே.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

கோபம்

கோபம் தாமச குணத்தின் அடையாளம். கோபத்தில் மனிதனுக்குப் பகுத்தறிவு போய் விடுகிறது. அனுமார் இலங்கையைக் கொளுத்தினர். ஆனல் சீதாதேவி இருக்குமிடத்தையும் அந் நெருப்பு எரித்து

விடுமே என்ற எண்ணம் அவருக்கு அப்போது இராமல் போயிற்று.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

பாவமும் பாதரசமும்

பாவமும் பாதரசமும் எளிதில் ஜீரணமாகா.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

பழமொழிகள்

முன்மாதிரியாக நடந்துகாட்டிய பெரியோர்களைப் பின்பற்ருத மக்கள் வாழ்க்கையில் முன்னேற்றத்தைக் காண்பது அரிது,

—கோல்டு ஸ்மித்

ஆயிரம் மைல் பிரயாணம் என்பது ஓர் அடி எடுத்து வைத்தவுடன் தொடங்குகிறது.

—ஜப்பானியப் பழமொழி

பன்றியோடு சேர்ந்தால் கன்றும் கெட்டுவிடும்.

—இந்தியப் பழமொழி

பொறுமைக் குணம் மிகவும் தேவையான சமயத்தில் நமக்குப் பயன்படவில்லை யென்ருல், அதனுல் நமக்கு என்ன பயன் ?

—ஜெர்மன் பழமொழி

மாட்சிமை மிக்க மன்னரோடு குதிரைச் சவாரி செய்வோரெல்லோரும் இளவரசன் என்று மதிக்கப் படுவரோ ?

—டச்சுப் பழமொழி

ஒரு எதிரியைக் கொல்ல

யுத்தத்தில் ஒரு எதிரி சிப்பாயைக் கொல்வதற்கு எவ்வளவு செலவாயிற்று என்பதை ஒரு ஜெர்மன் பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது.

யுத்தம்	ஒரு எதிரியைக் கொல்லச் செலவு
1. ஜூலியர் ஸீஸர் காலத்தில்	ரூ. இரண்டு
2. நெப்போலியன் காலத்தில்	ரூ. பதின்மூவாயிரம்
3. அமெரிக்க சுதந்திர போரில்	ரூ. இருபத்தோராயிரம்
4. முதலாவது உலகயுத்தத்தில்	ரூ. ஒரு லட்சம்
5. இரண்டாவது உலக யுத்தத்தில் ஒரு ஜெர்மன் அல்லது ஜப்பானிய சிப்பாயைக் கொல்ல அமெரிக்கா செலவு செய்த தொகை	ரூ. பத்து லட்சம்

பக்தியற்ற அரசியல்

உண்மை தெய்வ பக்தி கொண்டவர்கள் மக்களுடைய நலனைப் பற்றிக் கவலைப்பட்டே தீரவேண்டும். ஆனபடியால் அவர்கள் அரசியலில் சம்பந்தப்படாமல் இருக்க முடியாது. அரசியல் விவகாரங்களில் ஆண்டவனுடைய ஆட்சியை உணர்ந்து நிலைநாட்ட வேண்டும். தெய்வ பக்தியைப் புறக்கணித்த அரசியல், அழுக்குக்குச் சமானமாகும். அதைத் தீண்டலாகாது.

—காந்தியடிகள்

ஆண்டவன் நியதி

எல்லாம் விதிப்படி நடக்கும் என்று நாம் சும்மா இருக்கலாகாது. ஆண்டவனுடைய இச்சைப்படி அனைத்தும் நடப்பது உண்மை. அவன் நம்மைப் போல கண்டபடி நடப்பதில்லை. அவனுடைய இலக்கணம் வேறு; நம்முடைய இலக்கணம் வேறு. நியதிக்கு நியதியானவன் அவன். நியதி எப்போதும் தவருது. உலகம் எல்லாம் மாறி மாறி இயங்கும். அவனுடைய நியதியோ மாருத நியதி.

—காந்தியடிகள்

ஞானியின் இயல்பு

பல நிறங்களையுடைய பசுக்களின் பால் ஒரே வெண்மை நிறமுடையதாய் இருக்கிறது. அதுபோலவே ஞானிகள் பசுவின் பாலைப் போலே, பல வகைப்பட்ட சரீரங்களிலுள்ள ஜீவர்களை ஒரே அறிவு மயமானவராய்க் காண்கிருர்கள்.

—பிரம பிந்துப நிஷத்

பரமாத்மா

கறந்த பாலில் மறைந்து உறையும் நெய் போல பரமாத்மா ஒவ்வொரு ஜீவனிடத்திலும் வாழ்கிருன்.

—உபநிஷத்

மதம்

மதம் என்பது மனிதனை மனிதனேடும், கடவுளோடும் பிணைத்து வைக்கவே உதவும்.

மதம் என்பதின் உட்பொருள் சத்தியமும் அஹிம்சையும்தான் என்று நான் கருதுகிறேன்.

—காந்தியடிகள்

உயர்வு தாழ்வு

கடவுளின் பூமியில் எவனும் தாழ்ந்தவன் அல்லன்; எவனும் உயர்ந்தவன் அல்லன்.

ஒரு தேசத்தினரையோ, ஒரு சமுதாயத்தையோ, ஒரு கூட்டத்தினரையோ தனி உரிமையாக்கி ஆளுவது அநீதியாகும்.

—காந்தியடிகள்

கீதையின் போதனை

நமது சரீரத்தை நம்முடையது அல்ல என்று நினைக்க வேண்டும் என்று சொல்லுவது சுலபம். அப்படிச் செய்வது கடினம்தான். யாராவது நம்மை

அடித்தால், அடிக்கவில்லை யென்றுவது நோகவில்லை யென்றுவது வைத்துக்கொள்ள முடிகிறதா? அப்படிச் செய்ய என்ன உபாயம்? உடம்பு இல்லை என்று நினைக்க முடியாமற் போனல், உலகத்தில் உள்ள எல்லா உடம்புகளும் நம்முடையதே என்று நினைக்க ஆரம்பிக்க வேண்டும். அதே இதற்குச் சரியான உபாயம். அப்படி நினைப்பதால் இதரர்கள் கஷ்டப்படும்பொழுது அதற்கும் பரிகாரம் செய்ய நமக்கு எண்ண முண்டாகிறது. இதரர் களுடைய சுக துக்கம் நம்முடையனவாக ஆகிவிடு கின்றன. நாம் செய்யும் எந்தக் காரியமும் நமக்காக அல்ல என்னும் எண்ணம் தானகவே ஏற்பட்டுவிடும். இந்த முடிவையே, எல்லாவற்றையும் ஈசுவரனுக்கு அர்ப்பணமாகச் செய்யவேண்டும் என்று பகவான் கீதை யில் அர்ஜுனனுக்கு உபதேசிக்கிருர்.

—காஞ்சி காமகோடி பீடாதிபதி

குருதேவர் பாட்டு

குருதேவர் ரவீந்திரநாத் தாகுர் பாடிய ஆங்கிலப் பாட்டு ஒன்றின் மொழிப் பெயர்ப்பு,

"பட்டினியால் வாடுபவர்
வீடில்லாமல் தவிப்பவர்
வானத்தை நோக்கிக்
கடவுளுடைய பெயரைச் சொல்லி
அவருடைய உதவியை நாடுகின்றுர்கள்
அவர்களுடைய வேண்டுகோள் வீண் போகாது
கடவுளுடைய அருள்
மனிதனுடைய அன்பு மூலமாகவும்
மாவீரம் நிறைந்த சேவை மூலமாகவும் வெளிப்படும்"

தவறை ஒப்புக்கொள்ளல்

ஒருவர் தாம் செய்த தவறை உண்மையுடன் பகிரங்கமாகக் கூறினால், அது அவர் உள்ளத்தைத் தூய்மைப் படுத்துவதோடு, அந்தத் தவறை மீண்டும் செய்யாமல் காப்பாற்றும்.

—காந்தியடிகள்

சேவை

பிறருக்குத் தொண்டு செய்ய விரும்புகிறவர்களுக்கு எல்லையற்ற சகிப்புத் தன்மையும் பொறுமையும் வேண்டும். தம் கருத்துக்களைப் பிறர் மீது திணிக்கலாகாது.

—காந்தியடிகள்

பிறரும் நாமும்

பிறர் கண்ணிலுள்ள தூசியைப் பார்ப்பது எளிது; ஆனால் நம்முடைய கண்ணிலுள்ள ரத்தத்தைப் பார்ப்பது கஷ்டம்.

—பழமொழி

நண்பனும் பகைவனும்

ஒவ்வொருவருக்கும் நண்பனும் பகைவனும் அவரவரேதான்.

—பகவத்கீதை

புத்தர் வாக்கு

தீமையைச் செய்பவர் நாமே
துன்பத்தை அனுபவிப்பவர் நாமே
தீமையைச் செய்யாதிருப்பவர் நாமே
நம்மைச் சுத்தம் செய்பவர் நாமே
நம்மைக் காப்பாற்றுவர் நம்மைத் தவிர யாருமில்லை
வேறு எவராலும் முடியாது; வேறு யாரும் செய்யமாட்டார்கள்
நாம்தான் நல்வழியில் நடக்கவேண்டும்
புத்தர் வழியைக் காட்ட மட்டுமே செய்வார்.

நம்பிவிடாதே

காதால் கேட்டதை யெல்லாம் நம்பி விடாதே. பழையன வென்றும், பரம்பரையாக வந்தன வென்றும் எதையும் நம்பிவிடாதே. வதந்திகளைப் பற்றி மக்கள் அதிகமாய்ப் பேசுகிறார்கள் என்று எண்ணி அவற்றை நம்பாதே. நம்பலாம் போலத் தோன்றுகிறது என்ற காரணத்துக்காக எதையும் நம்பிவிடாதே.

—புத்த பகவான்

கெட்டதை எதிர்த்துநில்

மனித உள்ளங்கள் ஒன்றை யொன்று எதிர்த்து நிற்கக் கூடாது. ஆனால் எல்லாம் ஒன்று சேர்ந்து கெட்டதை எதிர்த்து நிற்க வேண்டும்.

—கார்லைல்

கல்யாணம்

பணத்துக்காகக் கல்யாணம் செய்து கொள்ளாதே; பணத்தை இலகுவாகக் கடன் வாங்கிக் கொள்ளமுடியும்.

—ஸ்காட்லந்துப் பழமொழி

யார் குற்றம்?

எவனாவது உன்னை ஒருமுறை காட்டிக் கொடுத்தால் அது அவன் குற்றம்; அவன் இரு முறை காட்டிக் கொடுத்தால் அது உன் குற்றம்.

—ருமேனியப் பழமொழி

அறிஞனும் அறியாதவனும்

அறியாதவனாகவும், தான் அறியாதவன் என்பதை அறியாதவனாகவும் உள்ளவன் முட்டாள்; அவனை ஒதுக்கி விடு.

அறிந்தவனாகவும், தான் அறிந்தவன் என்பதை அறியாதவனாகவும் உள்ளவன் தூங்குகிறான்; அவனை எழுப்பு.

அறியாதவனுகவும், தான் அறியாதவன் என்பதை அறிந்தவனுகவும் உள்ளவனை அறைய வேண்டும்; அறை.

ஆனல் அறிந்தவனுகவும், தான் அறிந்தவன் என்பதை அறிந்தவனுகவும் உள்ளவனை அறிந்து கொள்.

ஒரு கீழைநாட்டுப் பழமொழி

பொய் வேடம்

நீர்போற் பலசொன் மொழிபவனை
நெஞ்சை யொளிக்கும் வஞ்சகனைப்
பாரோர் காணத் துளசியணி
பான்மை யோனை நெடிதாகச்
சேர முக்கா டிடுபவனைச்
செருந்தி மறைக்குங் குளநீரை
ஆரத்தீமை விளைப்ப வென
அறிந்தே யகல்வீ ரகல்வீரே.

—குருதேவர் வாக்கியம்
சுவாமி விபுலாநந்தர் பாடியது

காரண மின்றி வெகு உருக்கமாகப் பேசுபவனையும், தன் மனத்திலிருக்கும் எண்ணத்தை மறைப்பவனையும், அயலார் காணும்படி துளசிமாலை அணிபவனையும், பிறரைப் பார்க்க விருப்ப மில்லாதது போலப் பெரு முக்காடிட்டிருப்பவனையும், நீர்க் கோரைகளால் மறைக்கப் பட்ட நீரையும், தீமை விளைவிப்பன என்று நாம் நீக்க வேண்டும். [மேல் கூறியவை எல்லாம் பொய்வேடமே என்றபடி]

—சுவாமி விபுலாநந்தர்

விமான யுகம்

காற்றைவிடக் கனமான கருவி ஒன்று முதன் முதல் ஆகாயத்திலே சரியானபடி பறந்து காட்டியது அமெரிக்காவில் கிட்டிஹாக் என்னும் இடத்தில்தான். நாள் 1903 டிசம்பர் 17.

வில்பர் ரைட், ஆர்வில் ரைட் அண்ணன் தம்பியர். பிறப்பு 1867-ம் 1871-ம் ஆகும். தந்தையார் யுனைடெட் பிரதரன் திருச்சபை என்பதில் ஒரு பிஷப். விஞ்ஞானப் பரிசோதனைகள் செய்வதும் இயந்திர அமைப்புகள் காண்பதும் அவருக்கு மிக விருப்பம். திருத்தமாய் அமையாத டைப்ரைட்டர் ஒன்றையும் அவர் கண்டு பிடித்தார். தாயாருக்கும் இத்தகைய வேலைகளில் நாட்டம் உண்டு. வில்பரும் ஆர்விலும் இளமையில் தங்கள் வீட்டுச் சமையலறையில் செய்து பார்த்த பரிசோதனைகள் பல. அவற்றையெல்லாம் தாயார் அன்புடன் கண்டு ஆதரித்தார். தாயார் நெடுநாள் இவ்வுலகில் இருக்கவில்லை.

அச்சு இயந்திரம் ஒன்றை அமைத்து அச்சுக்கூடம் நிறுவி நடத்தஅண்ணன் தம்பியர் இருவரும் ஒத்துழைத்தனர். பின்னர் சைக்கிள் வியாபாரத்தில் இறங்கினர். விரைவில் அவர்களே சொந்தத்தில் சைக்கிள் செய்து விற்கலாயினர். அவர்கள் நெஞ்சிலே, பறப்பதைப்பற்றிப் படித்தறிய வேண்டும் என்னும் ஆவல் பிறக்க நெடுநாள் ஆகவில்லை,

பறவையைப் போல் நாமும் பறக்க வேண்டும் என்னும் எண்ணம் தொன்று தொட்டு மனிதன் கனவுலகில் இருந்துவரும் நினைப்பு. அது பத்தொன் பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் அநேக மக்களுக்கு ஆர்வமூட்டுவதாயிற்று. அமெரிக்காவிலும், ஐரோப்பா விலும் விஞ்ஞானிகள் பலர் பறப்பதிலுள்ள சிக்கல்களைப் பற்றி நினைப்பதும் கொள்கைகளை உருவாக்குவதும் பரிசோதனைகள் செய்து பார்ப்பதுமாக இருந்தனர்.

இந்த விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளைப் பற்றி என்னென்ன கைக்குக் கிடைக்குமோ அவற்றை யெல்லாம் அண்ணனும், தம்பியும் கரைத்துக்குடித்தனர். அக்காலத்தில் அமெரிக்காவில் அதிகார பூர்வமான விஞ் ஞான ஆராய்ச்சி நிலையமாக விளங்கியது, ஸ்மித் சோனியன் நிலையம் என்பது. 1899-ல் அவர்கள் அதற்கு எழுதிக் கேட்டு, பறப்பது பற்றிய ஆரர்ய்ச்சிக் கட்டுரை முதலியன பல பெற்றனர்; மேலும் எங்கெங்கு இது பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்றும் அந் நிலையத்தார் அவர்களுக்குத் தெரியப்படுத்தினர். நிலை யத்து டைரக்டர் சாம்யல் பி. லாங்லி என்பவருக்கும் இந்தப் பறக்கும் வித்தையில் நாட்டம் உண்டு. பட்டம் போன்ற சிறிய கருவிகள் செய்து நீராவி விசையால் அவற்றைப் பறக்கவிட்டுப் பார்த்திருந்தார். அவர் அவை நீராவி விசையால் சிறிது தொலை பறந்தாலும் ஒரு நிலையாகப் பறப்பதில்லை.

நிலை பிறழாமல் பறக்க வைக்க வேண்டும் ; இல்லை யேல் பறக்கும் கருவிகளால் ஒரு பயனும் இல்லை என்பதை வில்பரும், ஆர்விலும் நன்கு உணர்ந்தனர். ஆகவே காற்றியக்கக் கலையைக் கற்றறிய அவர்கள் முற்பட்டனர். ஆக்டேவ் கான்யூட் என்பவர் ஒருவர்

எழுதிய புத்தகம் ஒன்று அவர்களுக்கு உற்ற துணை ஆயிற்று.

கான்யூட் ஒரு ரயில்வே சிவில் என்ஜினியர். அமெரிக்காவில் காற்றைவிடக் கனமான விமானம் ஓட்டுந் துறையில் முதன்முதலாக உழைத்து வழி காட்டிய ஒருவர் அவர். அவர் எழுதிய அந்நூல் பறவைகள் பறப்பதைப் பார்த்துப் படிக்க வேண்டிய வற்றையும், பறக்கும் கருவிகளுக்கு இருபுறமும் அமைய வேண்டிய இறக்கைகளைப் பயன்படுத்துவது குறித்துச் செய்த பரிசோதனைகளையும் சுட்டிக் காட்டிற்று. அவர் குறித்த இறக்கைகள் பட்டுத் துணி போர்த்தியவை; நீண்ட சதுரவடிவமானவை. அவை அசையாதபடி பொருத்தப்பட்டிருக்கும், போகும் திசைக்குச் சற்றுச் சாய்வாக அமைந்திருக்கும்; போகும் வேகத்தால் உண்டாகும் காற்றழுத்தமே அந்த இறக்கைகளை மேல் நோக்கித் தாங்கிய வண்ணம் இருக்கிறது; போகும் வேகமோ, வேறொரு தனி யந்திரத்தால் கிடைப்பதாகும்.

அண்ணனும் தம்பியும் பட்டங்களையும் கிளைடர் விமானங்களையும் வைத்துக் கவனமாகப் பல பரிசோதனைகள் நடத்திப் பார்க்கத் துணிந்தனர். ஆள் நடமாட்டம் இல்லாமலும் ஒரே சீராகக் காற்று வீசுவதுமாகிய தனி இடம் ஒன்று தேடினர். கடைசியாக வடகரோலினு ராஜ்யத்தில் அட்லாண்டிக் கரையோரம் கிட்டி ஹாக் என்னுமிடத்தில் அரசாங்க வானிலைக் கூடத்தின் அருகே தக்க இடம் ஒன்றைக் கண்டனர். அங்கே அவர்கள் தங்கள் கருவியைத் தரையில் இருந்துகொண்டு பட்டம் போல் பறக்கவிட்டுப் பார்த்தனர். இதுதான் முதல் ஆண்டு நடந்தது. அடுத்த ஆண்டு கிளைடர் விமானத்தை வைத்துப் பரிசோதனைகள் நடத்தலாயினர்.

கிளேடரின் நடுவில் சிறிய இடத்தில் அவர்களில் ஒருவர் உட்கார்ந்து கொண்டு விமானம் குடை சாய்ந்துவிடாமல் நிலையாகச் செல்வதற்கு வேண்டியபடி தமது உடம்பை இப்பக்கமும் அப்பக்கமும் சாய்த்துச் சமன் செய்வார். இறக்கைகளின் நுனியை அதிகமாகவோ குறைவாகவோ வேண்டிய அளவு சாய்த்து விமானத்தின் நிலை பிறழாமல் காக்கலாம்; அதுவே விமானம் சீராகப் பறப்பதற்குச் சிறந்த வழி என்று ஆர்வில் சொன்னர். இன்று விமானங்களில் "ஏலிரான்" என்பவை இருப்பது, ஆர்வில் சொன்ன இந்த யோசனையினால்தான்.

பின்னர் அண்ணனும் தம்பியும் வீடு திரும்பினர். ஓஹயோ ராஜயத்தில் டெய்ட்டன் என்பது அவர்கள் ஊர். அங்கே அவர்கள் காற்றை வேகமாக அடிக்க வைத்துப் பரிசோதனைகள் நடத்துவதற்குரிய சிறிய காற்றுக் குழாய் ஒன்றை அமைத்தனர். விமானத்துக்கு வேண்டிய இறக்கைகளைப் பல பொருட்களால் செய்து பரிசோதித்துப் பார்த்தனர். இக் கலையில் ஏற்கனவே நிலவிய பலருடைய கருத்துக்களும் கொள்கைகளும் தவறெனக் காட்டினர். தங்கள் பறக்கும் கருவியைத் திருத்தி அமைத்தனர். கிட்டிஹாக் சென்றனர்; விமானம் நிலை பிறழாமல் சீராகப் பறப்பதற்கு வேண்டிய வித்தை கைவரப் பெற்றனர்; துணிவு கொண்டனர்; தங்கள் கருவிக்கு உரிமைப் பதிவு வேண்டினர்.

திருத்தம் அற்ற ஒரு மோட்டாரைச் சொந்தமாகத் தங்கள் பட்டறையில் செய்து, தங்கள் பதிவு விமானத்தில் பொருத்தி எடுத்துக் கொண்டு கிளம்பினர், அண்ணன் தம்பியர் இருவரும் கிட்டி ஹாக் நோக்கி. 1903 டிசம்பர் 17, காலை வேளை கடுங் குளிர்; வீசி வீசி அடித்தது காற்று; பக்கத்திலிருந்த வானிலைக் கூடத்தாரைக்

கைதட்டிக் கூப்பிட்டனர். அவர்கள் வந்து கைகொடுத்து விமானத்தைத் தக்க நிலையில் நிறுத்தினர். ஆர்வில் அதில் ஏறி அமர்ந்தார். வில்பர் விமானம் நிலைபிறழ்ந்து விடாதபடி இறக்கையைப் பற்றிக் கொண்டு நின்ருர். அது நூறடி உயரமான மணல் மேடு; அங்கிருந்து விமானம் கீழ் நோக்கி உருண்டு முன்னே பாய்ந்தது; காற்றில் மிதந்தது; பறந்தது; விமான யுகமும் பிறந்தது.

அவர்கள் அன்று முதன் முதல் சரிவரப் பறக்க விட்ட அவ்விமானம் அப்பொழுது பறந்த நேரம் கணக்காகப் பன்னிரண்டு விஞடிகளேயாகும்.

தெய்வப் பணி - இரு லட்சியங்கள்

[மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆங்கிலத்தில் எழுதியுள்ள இக் கட்டுரையை ஸ்ரீ டி. எஸ். கோதண்ட ராமன் அவர்கள் தமிழில் மொழி பெயர்த்திருக் கிறார்கள்.]

விசுவ ரூபமும் எல்லையில்லாப் பேரன்பும் உடைய இறைவனை நினைப்பதில், ஆரியர் மனமும், கிறிஸ்துவர் மனமும் கூரிய வேறுபாடுடையதாக விளங்குகிறது என்பதைச் சமீபத்திய கட்டுரை ஒன்றில் ஸ்ரீமதி அன்னி பெஸண்ட் அவர்கள் எடுத்துக் காட்டியிருப்பது, புகழ்ச் சிக்கு உரியதாகும். இறைவனை எந்த உருவில் காண நாம் விழைகிறோமோ, அந்த உருவில் அவன் காட்சி தருவான் என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். காரணம், ஆதியந்த மில்லாப் பரம் பொருளைக் கணக்கற்ற வழி களில் காணலாகும் என்பதே. எனினும், இதுவரை மனித குலம் அறிந்து கொண்டுள்ள வழிகளில் பல ஒன்றை யொன்று நிறைவு படுத்துவதாயும், பல ஒரு கருத்தை விளக்கிக் கூறுவதாயும், சிலவே ஒன்றுக் கொன்று நேர் எதிரிடையான தாயும் இருக்கின்றன.

அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றுபட்டிருப்பி னும், முடிவில் நேர் எதிரிடையாக விளங்குகின்றன, ஆரிய, கிறிஸ்துவ சமயங்களின் தெய்வானுபூதி முறைகள்.

ஒரு சமயம், ஒரு தியாகியைத் தன் லட்சிய புருஷ ராகக் கொண்டிருக்கிறது. துன்பங்களைப் பொறுத்துக்

கொள்ளும் பேராற்றல் படைத்த இயேசு கிறிஸ்து, அள விலா அன்பு பூண்டவராக இருந்தும் கொல்லப்பட்டார்; அவர் கொள்கைகள் வெற்றிபெற்ருலும் அவர்மாண்டார். கிறிஸ்து சமய மகான்கள் எல்லோரும் பர மண்டலத்தி லுள்ள பரம பிதாவிற்காக உயிர் துறந்தவர்கள். தியாகி களின் செந்நீரால் அந்தச் சமயம் விதை யூன்றியுள்ளது. அதன் சின்னம் சிலுவை. சுய இன்பத்தைத் துறப்பதன் மூலம் பாபச் சுமையைக் கழுவுவதுதான் அதன் தலையாய முயற்சியாகும்.

மற்ருென்ருன ஹிந்து சமயம், தெய்வத்தின் படை வீரர்களான ரிஷிகளை உயர்வுபடுத்துகிறது. அவர்கள் தெய்வப் படையைச் சேர்ந்திருந்தாலும் மண்ணுலகத்தை விரும்புகிறவர்கள். மண்ணுலகஇன்பத்தை நாடுபவர்கள் தம் கொள்கைகளுக்காக இறைவன் திருப் பெயரால் போராடுவார்களே யன்றித் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். அவர்கள் நீண்ட வாழ்வும், புகழ் மிக்க சந்ததியும், கற்புக் கடம் பூண்ட வாழ்க்கைத் துணையும், சோம ரஸமும் வேண்டி நிற்பவர்கள்.

தருமபுத்திரனின் நம்பிக்கைக்குரிய ஆலோசகனாக வும், வீரன் பார்த்தனின் சாரதியாகவும் குருவாகவும், கோபிகளின் உள்ளத்தை கொள்ளைகொண்டவனாகவும், யாதவ குலத் தோன்றலாகவும், வேய்ங்குழலில் பண்ணி சைக்கும் நாயகனாகவும் விளங்கிய கிருஷ்ணனை மிகச் சிறந்த அவதார புருஷனாகப் போற்றுகிறது ஹிந்து மதம்.

மனிதன் விரிவும் ஒளியும் பெறவேண்டும் என்பது தான் - சுய மறுப்பு அன்று - அதன் புனிதக் கொள்கை. மிக மிக உயர்ந்த பரம்பொருளை வழிபடுபவர்களுக்குக் குறைந்த அளவு, அமைதியும் செழுமையும் மகிழ்ச்சியும்

வேண்டும். இராமனின் படையைச் சேர்ந்த வானரங்கள், முதலில் கொல்லப் பட்டாலும் பின்னர் மீண்டும் உயிர் பெறுகின்றன. இந்த உலகம் நம்முடைய வாழ்க்கை முறைகளைச் செம்மைப் படுத்தும் சீர்திருத்தப் பள்ளிக்கூடம் அல்ல; நம்முடைய மேன்மையான பரம்பரைச் சொத்தாகும். இறைவன் திருப்பணி ஆற்றுதவர்கட்கும், அவன் வழி நிற்காதவர்கட்கும் துன்பம் ஒரு நல்ல பாடம். ஆனால், இறைவழி நிற்போர்க்கு என்றும் நன்மையே. நம்முடைய சின்னம், அகண்டமான பரம்பொருளின் பல்வேறு நிலைகளைக் குறிக்கும் உருவங்கள் ஆகும்-துயரச் சிலுவையல்ல; சாவின் துன்பமும் அல்ல.

நல்லிசையும் நல்லியல்பும் ஹிந்து மதத்தின் விதைகள் ஆகும். அக்னியும் வருணனும், இனிய புலாலையும் சோம ரஸத்தையும் விரும்புகின்றனர். இவர்களை விடப் புனிதமும் உயர்வும் பெற்ற சிவனும் விஷ்ணுவும் மலரும் பழமும் கொண்டு மகிழ்கின்றனர். ஆனால், மறைந்தொழிந்து போய் விட்ட கீழ்த்தர நெறியினராலும், தாந்திரிகர்களாலும் பூசிக்கப்படும் துர்க்கையைத் தவிர வேறு தெய்வங்கள் மனித ரத்தத்தை ஏற்பவை அல்ல.

கோட்டைபோல் வளர்ந்திருக்கும் தவறுகளின் பாதங்களின் மிதிபட்டு நாம் அழிவதில்லை. நாம் தோன்றியவுடன், தவறுகள் மறைகின்றன. ஏனெனில், நாம் கடவுளின் பணியைச் செய்கிறோம். தன் பணியைச் செய்பவர்களை அவன் அவமதிப்புக்கும் சாவுக்கும் ஆளாக்கமாட்டான். அவன் பணியைச் செய்கையில் நாம், இன்னும் பெரிய, செழிப்பான, மதிப்பான, மகிழ்ச்சியான வாழ்வில் நுழைகிறோம். மனிதர்கள் கடவுளைக் கண்டால், மண்ணுலகம் விண்ணுலகமாகி விடுகிறது. ஹிந்து தெய்வத்தின் புதல்வன்-பார்வதி குமாரன்-

முன்னிலேயில் வேற்றுமைகளுக்கு இடமில்லே. மனிதர் களும் தெய்வங்களும் பரஸ்பரம்உதவிசெய்து கொள்கிருர் கள். சத்தியம் போற்றப்படுகிறது, மேன்மைப் படுத்தப் படுகிறது. வெற்றியும்பெறுகிறது;சிலுவையில் அறையப் படுவதில்லே. இறைவனே அடையும் மார்க்கம் பாபத் தைத் கழுவுவது அல்ல; இருள் செறிந்த இடத்தில் ஒளியைக் கொணர்வதுதான். ஆன்மீக ஒளியைப் பெறு வதன் முலமாக நாம் பரிசுத்தத் தன்மை எய்துகிருேம்- துன்பத்தைப் பொறுப்பதன் மூலமாக அன்று. துன் பத்தைப் பொறுப்பதன் மூலம் ஆன்ம ஒளி பெறுதல் சாத்தியமாக இருக்கலாம். ஆனல், இதிலிருந்து மாருன, சத்தியம், நேர்மையைக் கடைப் பிடித்தல் என்ற உயர்ந்த வழி இருக்கிறதே!

ஆனல், ஒரு பாமர கிறிஸ்துவர், கிறிஸ்து மதத் தின் உண்மையான தத்துவங்களே உணர்ந்திருக்க மாட் டார். அதைப் போலவே, ஒரு பாமர ஹிந்து, வேத, புராணங்களின் படிப்பினேகளே உணர்ந்தவராக இருக்க மாட்டார். மொட்டை யடித்த தலே சந்நியாசியையும், முப்புரி அந்தணனேயும், வேஷத்தரல் குறிப்பிடுவனவே யன்றி, அவர்கள் தத்துவங்களே உணர்ந்து கொண்டிருப் பதனல் அல்ல!

நேர் மாருன தன்மையுடைய இவ்விரு லட்சியங் களும் பின்பற்றப்படும் இடங்களில் உண்டாகும் விளேவு களும் நிச்சயம் நேர் மாருனவைகளாகவே இருக்கும். மேற்கு நாடுகள் கீழ்நாடுகளின் தத்துவ தரிசனங்களேப் பெறவேண்டும் என்றும் கீழ்நாடுகள் மேல் நாடுகளின் செயல் முறை அனுபவத்தைப் பெறவேண்டும் என்றும் அன்னிபெஸண்ட் அம்மையார் குறிப்பிட்டிருப்பது சிறப்புடையதாகும்.

பைபிள் காப்பாற்றுகிறது. வேதம், அமரத் தன்மையை அருள்கிறது.

பைபிள் காப்பாற்றுகிறது-சிலுவையின் மூலமாக. வேதம், அமரத் தன்மை அருள்கிறது–சோமரஸத்தின் மூலமாகவும் ஆன்ம சாந்தியின் மூலமாகவும்.

துன்பப் பொறையின் மூலம் இறைவனின் புனிதத் தன்மையை அடையும் நெறியைப் பைபிள் குறிக்கிறது. உயிர்ந்த வாழ்வின் மூலம் கடவுளின் பேரொளியை அடையும் வழியை வேதம் குறிக்கிறது.

பார்மோஸா - கரையோரத் தீவுகள்

சீனத்தின் கரையோரத் தீவுகளில் ஒன்றுன குமாயைக் கைப்பற்ற, கம்யூனிஸ்டு சீன அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. இதனுல் சட்டம்-அரசியல் சிக்கல்கள் தோன்றியுள.

சீனுவில் கம்யூனிஸ்டு செல்வாக்கு உறுதிப்பட்டபோது, 1949 இல், சியாங் கே-ஷேக், பார்மோஸாவில் தேசீய சீன அரசாங்கத்தின் தலைமைப் பீடத்தை நிறுவினர். அப்போது பார்மோஸா, பெஸ்கடோரஸ், குமாய் மாட்ஸு, தாசேன் முதலிய தீவுகள் தேசீய சீன சார்க்காரின் ஆளுகையிலிருந்தன.

1950 ஜுனில் கொரியாப் போர் மூண்டதும், ஜனுதிபதி ட்ருமன், பார்மோஸாவுக்குப் பாதுகாப்பளிக்க அமெரிக்காவின் 7 வது கப்பற்படையை அனுப்பி வைத்தார். சீனுவைத் தாக்கும் முயற்சியைக் கைவிடுமாறு தேசீய சீன அரசாங்கத்தையும் கேட்டுக் கொண்டார்.

1953 பிப்ரவரியில்,சீனக் கடலில் அமெரிக்கப் போர்க் கப்பல்களை நிறுத்தி வைக்கும் தேவை மாறிவிட்டதென்று ஜனுதிபதி ஐஸன்ஹோவர் கூறினர். அமெரிக்கக் கப்பல்கள் நகர்ந்ததும், சீனத்தைத் தாக்கும் முயற்சி தொடங்கிற்று. ஆனுல் வெற்றி ஏற்படவில்லை.

1954 ஜுலையில் இந்தோ சீனு விவகாரத்தில், சமரஸ ஏற்பாடு-ஜினீவா மகாநாட்டில்-செய்யப்பட்டது. இதன் பிறகு, கம்யூனிஸ்டுகளுடைய கவனம் கரையோரத் தீவுகள்மீது திரும்பிற்று. தேசீய சீன அரசின் ஆளுகைக்

குட்பட்ட தீவுகளைக் கைப்பற்ற, கம்யூனிஸ்டுகள் ராணுவ முஸ்தீபு செய்ததுடன், தீவிரமாகப் பிரசாரமும் செய்தார்கள். தீவுகள்மீது விமானமூலம் வெடிகுண்டுகளை வீசினார்கள். ஆரம்பத்திலிருந்தே, தேசீய சீன அரசாங்கத்தையே சீனாவின் சட்டபூர்வமான அரசாங்கமாக மதித்து, ஆதரித்து வரும் அமெரிக்கா, பார்மோஸா சர்க்காருக்கு உதவத் திட்டமிட்டது. 1954 டிசம்பரில், அமெரிக்க சர்க்காரும் பரஸ்பர பாதுகாப்பு உதவி உடன்பாடு செய்துகொண்டார்கள். இந்த உடன்பாட்டால் கரையோரத் தீவுகளுடைய நிலைமை பாதிக்கப்படவில்லை.

பார்மோஸா, பெஸ்கடோரஸ் தீவுகளைத் தாக்குதல் அபாயத்திலிருந்து காக்கவும், நேசநாட்டின் பிற்பகுதிகளுக்குத் தகுந்த பந்தோபஸ்து அளிக்கவும், ராணுவ உதவி அனுப்ப ஜனாதிபதிக்கு அனுமதி வழங்குவதாக, 1955 ஜனவரியில் அமெரிக்கக் காங்கிரஸ் தீர்மானம் செய்தது.

உரிமைபற்றி சிக்கல்

பார்மோஸா, பெஸ்கடோரஸ் தீவுகளின் உரிமை பற்றி சட்டச் சிக்கல்கள் உண்டு. இவை 1683 இல் சீன சாம்ராஜ்யத்தில் இணைந்தன. 1895 இல் ஜப்பானும் சீனாவும் செய்துகொண்ட ஷிமோனாஸகி உடன்படிக்கையின்படி இவை ஜப்பானுடைய கைக்கு மாறின. இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் தோற்றதும், இந்தத் தீவுகளைச் சீனர்களிடம் திருப்பிக் கொடுத்துவிட, நேசநாடுகள் முடிவு செய்தன. 1945 இல் சியாங்கே ஷேக்கின் படைகள், இந்தத் தீவுகளின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டன. ஆயினும் சர்வதேச உடன்படிக்கைப்படி சட்டபூர்வமான உரிமை மாற்றம் செய்யும் வரையில், இவை ஜப்பானிய ஆளுகைப் பிரதேசமாகவே கருதப்பட்டன.

ஜப்பானும் அதனுடன் போரிட்ட நாடுகளும் (சீனு நீங்கலாக) 1951 செப்டம்பரில் ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டன. அதில் ஜப்பான், பார்மோஸா, பெஸ்கடோரஸ் தீவுகள் மீது தனக்குள்ள உரிமைகளை விட்டுக் கொடுத்து கையெழுத்திட்டது. அதேபோல, 1952 ஏப்ரலில் தேசீய சீன சர்க்காருடன் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கையிலும் இந்தத் தீவுகள் மீது தனக்குள்ள உரிமைகளைத் துறப்பதாகக் கூறி, கையெழுத்திட்டது.

ஆயினும், இந்தத் தீவுகள், சட்டபூர்வமாகத் தேசீய சீனுவின் ஆளுகைக்குட்பட்டவை என்பதற்கில்லை. பிரிட்டிஷ் கருத்துப்படி சட்டபூர்வமாக அதிகார மாற்றம் ஏற்பட்டால்தான் உரிமை ஏற்படும். ஆகவே பார்மோஸா, பெஸ்கடோரஸ் தீவுகளை ஆளும் உரிமை பற்றி ஒரு முடிவும் ஏற்படவில்லை என்பதே பொருந்தும்.

ஆனுல் கரையோரத் தீவுகளின் நிலைமை வேறு. கம்யூனிஸ்டு சீன அரசை ஏற்றுக் கொண்ட பிரிட்டனும், பிறநாடுகளும், கரையோரத் தீவுகள் சீனப் பெருநிலத்தின் பகுதிகள் என்பதை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. சட்டபூர்வமாக, அவை கம்யூனிஸ்டு சீன அரசாங்கத்தின் ஆட்சிக்குட்பட்டவைதான் என்ருலும், இதில் ஒரு சிக்கல் உண்டு. அந்தத் தீவுகள் வேறு ஓர் ஆட்சியில் சிக்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றை மீட்க, ராணுவ பலத்தை உபயோகிக்க முடியாதபடி இருக்கிறது.

மெட்ரிக் முறை

மெட்ரிக் முறை மொத்தம் 77 நாடுகளில் சட்ட பூர்வமாய்க் கையாளப்படுகிறது; மொத்தம் 16 நாடுகளில் அது இஷ்டபூர்வ முறையாகவும், நான்கு நாடுகளில் அது அங்கீகரிக்கப்பட்ட முறையாகவும் இருந்து வருகிறது.

மெட்ரிக் முறையைச் சட்டபூர்வமாய்க் கையாண்டு வருகிற ஆசியநாடுகளும், அவை அந்த முறைக்கு மாறிய வருஷங்களும் வருமாறு: ஆப்கானிஸ்தானம் (1926), கம்போடியா (1914), சீனு (1930), இந்தோனேஷியா (1938), ஈரான் (1935), இஸ்ரேல் (1952), ஜப்பான் (1952), ஜோர்டன் (1954), பிலிப்பைன்ஸ் (1917) தென் கொரியா (1949), சூரிநாம் (1917), சிரியா (1935), தாய்லாந்து (1936), வியட்நாம் (தெற்கு) (1911),

மெட்ரிக் முறை பற்றி 1871–ல் இந்தியாவில் நிறைவேற்றப்பட்ட சட்டம் அப்போதிருந்த சர்க்காரால் நிறைவேற்றப்பட்டிருந்தால், 1871-ம் வருஷத்திலேயே இந்தியாவில் மெட்ரிக் முறை கையாளப்பட்டிருக்கும்.

பிரஞ்சுப் புரட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்துதான், எடைகள், படிகள் விஷயத்தில் ஒரே ரீதியான முறையை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்ற யோசனை பிரரன்சில் தோன்றியது.

மெட்ரிக் முறையானது 18-வது நூற்றுண்டின் கடைசியில் பிரான்ஸில் உருவாக்கப்பட்டது; அப்போது

அந்நாட்டில் உபயோகத்திலிருந்து வந்த எண்ணற்ற எடைகளுக்குப் பதிலாக அங்கே மெட்ரிக் முறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

1840-ம் வருஷம் வரையில் பிரான்சில் மெட்ரிக் முறையைப் பூரணமாக அமுலுக்குக் கொண்டுவர முடியவில்லை, அதற்குக் காரணம் என்னவென்ருல் மெட்ரிக் முறையை அப்படியே அமுல் நடத்தாமலேயே பழைய படி எடைபடிகளை அடிப்படையாகக் கொண்ட "மாறுதல் கால அளவுகளை" மெட்ரிக் அளவுகளில் குறிப்பிட முயற்சிக்கப்பட்டதுதான். உதாரணமாக, ஒரு பௌண்டு 500 கிராமுக்குச் சமமானதாகச் செய்யப் பட்டது; ஆனல் பௌண்டு 16 அவுன்ஸாகப் பிரிக்கப் பட்டது;ஒவ்வொரு அவுன்சும் 8 கிராஸாகவும்,ஒவ்வொரு கிராசும் 72 கிரெய்ன்களாகவும் பிரிக்கப்பட்டு இருந்தன.

மெட்ரிக் முறை பிரான்ஸில் மேற்கொள்ளப்பட்ட பிறகு அண்டை நாடுகளுக்கும் மெட்ரிக் முறை துரித மாகப் பரவியது. ஜெர்மனிக்கும், பிரான்சுக்கும் அந்தச் சமயத்தில் உறவுகள் அவ்வளவு சுமுகமாக இல்லா திருந்தபோதிலும் கூட, ஜெர்மனி 1872-ம் வருஷத்தில் மெட்ரிக் முறையை மேற்கொண்டது.

பிரிட்டனும் அமெரிக்காவும் மெட்ரிக் முறை ஒன்றையே பற்றி தங்களுடைய வர்த்தகத்துக்குக் கையாள முன்வராவிட்டாலும், மெட்ரிக் முறையின் உப யோகத்தை அவை முறையே 1864-லும், 1866-லும் சட்ட பூர்வமாய் அங்கீகரித்தன. அமெரிக்காவில் கஜ மானது மீட்டர்கணக்கிலும்,பௌண்டானது கிலோகிராம் அளவிலும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

பிரிட்டனில் எடை, படி சம்பந்தமான நிலைமை ஆராய்வதற்காக 1951-ல் பிரிட்டனின் வர்த்தக

போர்டால் அமைக்கப்பட்ட ஹாட்ஜ்ஸன் கமிட்டி காமன் வெல்த்நாடுகள் அமெரிக்கா ஆகியவைகளோடு கூட்டாக பிரிட்டன் மெட்ரிக் முறையை 20 வருஷ காலத்துக்குள் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று சிபாரிசு செய்தது. அத்தகைய மாறுதலுக்குப் பிடிக்கும் செலவு ஏராளமாக இருக்கும் என்ற காரணத்தினுல், பிரிட்டிஷ் சர்க்கார் அச்சிபார்சை ஏற்றுக்கொள்ளவில்லை.

விஞ்ஞான முன்னேற்றத்துக்கான பிரிட்டிஷ் சங்கம் சமீபத்தில் ஸர் ஹ்யூ பீவரின் தலைமையில் ஒரு கமிட்டியை அமைத்திருக்கிறது. மெட்ரிக் முறை அல்லது தசாம்ச எடை, படி, நாணய முறைக்கு பிரிட்டன் மாறுவதால் ஏற்படக்கூடிய செலவு, சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் இந்த முறையின் நடைமுறை சாத்தியம், அதற்காக ஏற்பாடுகள், அதனுல் விளையும் பலாபலன்கள் ஆகியவை பற்றி அக்கமிட்டி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்.

தேசீய மாதிரி சர்வே ஸ்தாபனம் 1951-ம் வருஷத்தில் சுமார் 1,000 கிராமங்களில் நடத்திய மாதிரி சர்வேயிலிருந்து, இந்தியாவின் பல்வேறு கிராமாந்தரப் பகுதிகளிலும் படிகள் அல்லது எடைகளில் சுமார் 143 வகை பேதங்கள் இருக்கின்றன என்று தெரியவந்திருக்கிறது. கனபரிமாணத்தை அளப்பதற்கு மட்டுமே 150 அளவு முறைகளும், நில விஸ்தீரணத்தை அளப்பதற்கு 180 அளவு முறைகளும் இருந்துவருவதாக அந்த சர்வேயில் சேகரிக்கப்பட்ட தகவல்களின் ஒருபகுதியை ஆராய்ந்ததிலிருந்து தெரியவருகிறது.

எடைகள் விஷயத்தில் 100-க்கு மேற்பட்ட ரக மணங்குகள் உபயோகத்திலிருந்து வருகின்றன; அந்த மணங்குகளின் எடை நிர்ணயமான தோலாக் கணக்கில்

280 தோலாவிலிருந்து 8,320 தோலாவரை இருக்கிறது. நிர்ணய மணங்கு 3,200 தோலா கொண்டதாகும்.

சேரின் எடை 8 தோலாவிலிருந்து 160 தோலா வரை பல படியாக இருப்பதாகக் காணப்படுகிறது; நிர்ணய சேர் 80 தோலா கொண்டதாகும்.

மீட்டரானது, பூமியின் தீர்க்க ரேகையில் கால் பகுதி துரத்தைக் கோடிப் பங்கு வைத்து அதில் ஒரு கூறுக்குச் சமமானது என்று முதலில் நிர்ணயிக்கப் பட்டது. கிலோகிராம் என்பது, ஒவ்வொரு பக்கத்திலும் 0.1 மீட்டர் அளவுள்ள கன சதுரத்தில் அடங்கியுள்ள சுத்தமான தண்ணீரின் எடை என்று வரையறுக்கப்பட்டது. இந்தத் தண்ணீரின் கனபரிமானம் முகத்தலளவையைக் குறிப்பிடும்போது ஒரு லிட்டர் என்று கூறப்படுகிறது.

இந்தியப் பாரம்பர்யத்தின் சிறப்பு

[பிரிட்டிஷ் ஹைகமிஷனர் கனம் மால்கம் மாக் டொனல்டு 6—9—58 அன்று ஸிம்லாவிலுள்ள பிஷப் காட்டன் பள்ளியின் ஆண்டு விழாவில் கலந்து கொண்டு, நிகழ்த்திய உரையின் சுருக்கம்.]

என் பள்ளிப் பருவத்தில், பள்ளிக்கூட ஆண்டு விழாக்களில் பங்குபற்றும் பிரமுகர்கள், பிரிட்டனுடைய பெருமையைப் பற்றியும் உலகின் ஒவ்வோர் பகுதியிலும் அதன் ஆட்சி நடக்கும் சிறப்புப்பற்றியும் சொற்பொழி வாற்றுவது வழக்கம்.

காலம் மாறிவிட்டது. ஆயினும் பழைய வழக்கப் படியே நானும் உங்களுக்குச் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். ஆம், உங்களுடைய தாயகத் தின் பெருமைகளை எடுத்துக் கூறவே விரும்புகிறேன். இந்தியப் பிரஜை என்று கூறிக் கொள்வதில் பெருமை உண்டு. இந்தியாவின் வருங்காலப் பிரஜைகள் என்று கூறிக் கொள்வதில் நீங்கள் மகிழ்ச்சியடைய வேண்டும். நான் இந்தியப் பிரஜையல்ல; அன்னியன்தான். இந்த நாட்டில் சென்ற மூன்றுண்டுகளாக வசித்துவருகிறேன். எனக்குத் தெரிந்த மட்டில் இந்தியாவின் பெருமைகளை எடுத்துக் கூறுகிறேன்.

இயற்கை வளம் செறிந்த இந்நாட்டில் எத்தனையோ வகைக் காட்சிகள் உண்டு. உலகப் புகழ்பெற்ற

இமயத்தின் தாழ்வரையில் நீங்கள் படித்துக்கொண்டிருக்கிறீர்கள். பசுமைகொழிக்கும் சமவெளிகளும் ஒட்டகங்கள் நடமாடும் பாலைப் பிரதேசத்தையும் வன விலங்குகள் திரியும் அடர்ந்த காடுகளையும் இந்தப் பாரத நாட்டில் காணமுடிகிறது. பயங்கரமான மனிதன் அலையும் பனிச்சிகரங்களும் இந்த நாட்டிலுண்டு. பலநாட்டுக் கப்பல்கள் ஒதுங்கும் நீண்ட கடற்கரை உள்ளது இந்த நாடு.

பாரத நாடு பழம்பெரும் நாடு

பாரத நாட்டின் வரலாற்றில் பலபல செய்திகளைக் காண்கிறோம். பல்வேறு நாகரிகங்கள் தோன்றி மறைந்ததைத் தெரிந்து கொள்கிறோம். இந்த நாட்டில் பல பேரரசுகள் தோன்றி மறைந்தன. இந்திய நாட்டில் கலைகள் சிறந்தோங்கின. அன்னியர்கள் படையெடுத்து வந்தார்கள்.

சென்ற பல நூறு ஆண்டுகளில் பேரரசுகளை நிறுவிய மன்னர்கள் அழியாச் செல்வங்களை விட்டுச் சென்றார்கள், அரசியலும் நாகரிகமும் மாறிமாறி ஏற்பட்டாலும், இந்தியா வளர்ந்தது, வாழ்ந்தது. இந்த நாட்டில் பல வேறு இனமக்களைக் காண்கிறோம். பல மொழிகள் பேசும் மக்களைப் பார்க்கிறோம். வந்ததையெல்லாம் ஏற்றுக்கொண்டது. பாரதநாடு அதன் விளைவாக வெவ்வேறு மொழி வெவ்வேறு சமயம் கொண்ட மக்களைப் பார்க்கிறோம். இயற்கை வனப்பில் மாறுதல்களைக் காண்பதுபோல, வாழும் மக்களிடமும் பல்வேறு மாறுதல்களைக் காண்கிறோம். பார்ப்பதெல்லாம் புதிதாகத் தோன்றுவதால் சோர்வு என்று சொல்வதற்கே இடமில்லை.

இந்திய வரலாற்றில் எனக்கு வியப்பூட்டிய செய்தி அதனுடைய கலாசாரவளம்தான். இந்த நாட்டில்-

எத்தனை எத்தனை விதமான கலாசாரம்! எத்தனை விதமான நாகரிகம்!

கலை—பண்பாடு

ஒவ்வொன்றும் தனி வழி வகுத்துக் கொண்டு சிறப்புற்று ஓங்கிற்று. ஒவ்வோர் கலாசாரமும் ஒவ்வொரு வகை கலையைச் சிருஷ்டித்தது. அஜந்தாவிலுள்ள வண்ணச் சித்திரங்களும், மகாபலிபுரத்திலும் எலிபெண்டாவிலும், கோனராகிலும் பிற இடங்களிலுமுள்ள சிற்பங்களும் நமக்கு எத்தனை பேரரசுகளை நினைவூட்டுகின்றன! தில்லியிலும் ஆக்ராவிலும் மொகலாயச் சிற்பத்தின் பெருமையைப் பார்க்கிறோம். ராஜஸ்தானிலுள்ள வண்ணச்சித்திரங்கள் தனிச் சிறப்புடையவை.

தென்னாட்டிலுள்ள வெண்கலச் சிலைகள் கலைஞர்களுடைய திறனுக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றன. நுண்கலைகளிலும் இந்தியர்கள் வல்லவர்கள் என்றால் போதாது. பகுதிக்குப் பகுதி நுட்பமும் விளக்கமும் மாறுபடுகின்றன.

பரதநாட்டியம், கதகளி, மணிபுரி, கதக் என்று எத்தனை வகை நாட்டியங்களை இந்த நாட்டில் காண முடிகிறது! இந்திய இசையின் சிறப்பை எடுத்துக் கூறும் ஆற்றல் எனக்கு இல்லை. ஆனால் ஒன்று கூறுவேன். இந்திய மக்கள் பரம்பரையாகக் கலையைப்போற்றி வருவதால்தான் இந்தச் சிறப்பைக் காண்கிறோம். அவர்கள் பக்தியுடன், விநயபூர்வமாக அவற்றைக் கற்று கையாண்டு வருகிறார்கள். உங்களுடைய முன்னோர்கள் பேணிக்காத்த இந்தக் கலைப் பொக்கிஷத்தை நீங்கள் பெருமையுடன் பாதுகாக்க வேண்டும். எங்கள் தந்தையர் தந்த செல்வம் என்ற உணர்ச்சியுடன் நீங்கள் அவற்றைக் காக்க வேண்டும்.

கல், மண், சுவர், உலோகம்—கண்ணில் கண்ட பொருளை எடுத்து கலை உருக்கொடுத்த இந்தியர்களுடைய பெருமையை எப்படி எடுத்துக் கூறுவேன். பரம்பரையாக, இரத்தத்தில் ஊறிய திறன் அது. இந்தியக் கலைப்பொருள் ஒருவகைப் பட்டதல்ல. பலப் பல தலை முறைகளில், பலப்பல பண்பாடுகள் காரணமாக உருவானவை அவை. ஒவ்வொன்றிலும் அழகைக் காண்கிறோம். கலைகளுடைய கைவண்ணத்தை - மனக்கிளர்ச்சியை-காண்கிறோம்.

பண்புமிக்க மக்கள்

கலைச் சிறப்புள்ள இந்த நாட்டில் வறுமையும் கோர தாண்டவமாடுவதை, இந்தியாவின் நண்பர்கள் மறக்க முடியாது. பொருளாதாரத் துறையில் பின் தங்கிய இந்த நாட்டில் சுமார் நாற்பது கோடி மக்கள் வாழ்கிறார்கள். இத்த நாட்டை வனம் மிக்கதாகச் செய்யும் பொறுப்பு உங்களுக்கு முண்டு.

இந்தியக் கலைஞர்களும் உழவர்களும் வறுமை வாழ்க்கையை நடத்தினாலும் பண்புமிக்கவர்கள். அவர்களுடைய நற்பண்புகள் தான் நாட்டிற்குச் சிறப்பு என்றால் மிகையல்ல. இந்தியர்கள் வெள்ளை உள்ளம் படைத்தவர்கள்; முகத்திலிருந்து ஒருவனுடைய குணத்தைக் கூறக்கூடிய தெளிவான முகம் படைத்தவர்கள் என்று கூடச் சொல்லலாம்.

மாபெரும் நகரமொன்றில் சுமார் நாலாயிரம்பேர்கள் கட்டிடப்பணியில் ஈடுபட்டிருப்பதைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. செங்கற்களையும் சிமிட்டிக் கலவையையும் எடுத்துக்கொண்டு சுருசுருப்புடன் இயங்கும் அந்த உழைப்பாளிகளைக் கண்டு வியந்தேன். ஆணும் பெண்ணுமாகச் சாரத்தில் ஏறிஇறங்குவதைக் கண்டேன்.

அவர்கள் அனைவரும் ஏழைகள் தான். ஆனால் அவர்களுடைய முகங்களில் நற்பண்புகளைக் கண்டேன். அறியாமையின் சுவடு தெரிந்தாலும், அந்த முகங்களில் அடக்கம்,எளிமை,இனிமை,தன்மானம்,அறிவு, உழைப்பிலுறுதி எனப் பலவற்றைக் கண்டேன். என் மனத்தில் இந்தியர்களுக்கு ஓரிடம் கிடைத்தது.

எங்கு சென்றாலும் இந்திய மக்களை ஊன்றிப் பார்க்கலானேன். இனிமையும் எளிமையும் உழைப்பில் நம்பிக்கையும் கொண்ட மக்களையே கண்டேன்; இந்தியாவின் எதிர்காலம் அவர்களிடந்தான் இருக்கிறது.

வழிகாட்டி

இன்று இந்தியாவின் வரலாற்றில் சிறப்பானதோர் திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. பல தலைமுறைகளாக பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்த இந்தியா பதினொரு ஆண்டுகளுக்கு முன்பு விடுதலைபெற்றது. இந்திய மக்கள் சுதந்திரப் போராட்டத்தில், பிறநாட்டினருக்கும் வழிகாட்டிவிட்டார்கள். மலேயா, இந்தோனேஷியா, பர்மா, இந்தோ சீனா, முதலிய நாடுகள் நெடுங்காலமாக அன்னியராட்சிக்கு அடங்கிக் கிடந்தன. இந்தியாவில் எழுந்த விடுதலைக்குரல் தெற்காசியா முழுவதும் கேட்டது. இந்திய மக்களின் விடுதலை உணர்ச்சி தெற்காசிய மக்களைத் தட்டி எழுப்பிற்று. இதன் விளைவு என்ன ?

சில ஆண்டுகளுக்கு முன்பு காலனிகளாகயிருந்த தெற்கு ஆசிய நாடுகள்—இன்று சுதந்திர நாடுகளாகத் திகழ்கின்றன. சென்ற பன்னிரண்டு ஆண்டுகளில் பத்து நாடுகள் விடுதலைப்பெற்றன. இந்த நாடுகளுக்கு வழிகாட்டியாக இந்தியா நிற்கிறது. இந்தியாவில் அவ்வப்போது மகான்கள் தோன்றி, மனிதகுலம் வாழ வழி

காட்டியதாக வரலாறு கூறுகிறது. இந்த நூற்றுண்டிலும் பல சான்றேர்கள் தோன்றி இந்தியா மேம்பட உழைத்தார்கள்

கனவை நினவாக்குங்கள்

காந்திஜி, தாகுர், சர்தார் படேல், ஜவாஹர்லால் நேரு ஆகிய மாவீரர்களுடைய உழைப்பால் இந்தியா விடுதலை பெற்றது; மேன்மையுற்றது. சில சான்றேர்களுக்குத் தங்களுடைய வாழ்நாளிலேயே எடுத்தபணியை முடிக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. பலருக்கு அந்த வாய்ப்பு கிடைப்பதில்லை. தொடர்ந்து பணியாற்றும் பொறுப்பை மற்றவர்கள் பெற்றுக்கொள்கிருர்கள். நவ இந்தியாவைக் காண விரும்பிய மாவீரர்களுடைய பணி முடியவில்லை. இன்னும் பல ஆண்டுகளுக்குச் சலியாமல் உழைத்தால்தான் அவர்களுடைய கனவு பலிக்கும். குழந்தைகளாகிய நீங்கள் பெரியவர்களாவதும், இந்தப் பணியை தொடர்ந்து நடத்த வேண்டும். ஒளியுறும் பாரதத்தை உருவாக்க நீங்களும் உழைத்தல் வேண்டும்.

சகோதரபாவம்

கிராம மக்களுக்குக் கல்வியறிவு இல்லை என்று கூறினேன்;ஆனுல் அவர்கள் அறிவிலிகள் அல்ல;ஒழுக்கமும் சீலமும் நிறைந்தவர்கள் அவர்கள். நாதனற்று நிற்கும் மக்களை ஒன்றுபடுத்த சிறந்த தலைவர்கள் வேண்டும். உங்களுக்குச் சிறந்த முறையில் கல்விதரப்படுகிறது. வருங்காலத்தில் நீங்கள் நல்ல தலைவர்களாகப் பொறுப்பேற்க முடியும். நீங்கள் அரசாங்கப் பொறுப்பை ஏற்று நடத்த வேண்டும் என்பதில்லை. விஞ்ஞானம், கலை, வாணிபம், தொழில் எனப் பல துறைகளில் பொறுப்பேற்று,மக்களுக்கு வழிகாட்டமுடியும். நல்ல சூழ்நிலையில் கல்வி கற்கும் நீங்கள், ஒழுக்கத்தில் சிறந்தவர்களாகவும்

தாய்நாட்டுப் பற்றுடையவர்களாகவும் வாழ முடியும். மக்களுக்குத் தொண்டாற்ற பலவழிகள் உண்டு. உங்களுக்கு அந்த வாய்ப்புக் கிடைத்து இருக்கிறது.

நீங்கள் எந்தக் கொள்கையை கடைப் பிடிக்க வேண்டும், எப்படி வாழ வேண்டும் என்றெல்லாம் கூற என்னல் முடியாது. நாட்டுக்குகந்த நல்வழியைப்பின் பற்றுங்கள். செயலாற்றும் திறனேற்பட்டதும் நீங்களே கொள்கைத் திட்டம் வகுத்துக் கொள்ள வேண்டும். ஆனல் ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன்.

இந்த உபகண்டத்தில் பலமொழி பேசும் மக்கள் உண்டு; பல சமயங்கள் உண்டு; பல சாதிகளும் உண்டு. அனைவரும் ஒன்ருகச் சகிப்புத்தன்மையுடன் ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகள் போல வாழ்ந்துவருகிருர்கள். இந்த ஒற்றுமையை, பண்பாட்டை, வேறு இடத்தில் காண்பது அரிது. இந்த ஒற்றுமையைக் காண்பதே உங்களுடைய முதற்கடமை. வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாக வாழ்வது அரியதோர் கலையாகும். இதைப் பேணிவளர்த்தால்தான் இந்தியாவின் சிறப்பு ஓங்கும். இந்தியாவால் பிறநாடுகளுக்கு வழிகாட்ட முடியும். இதை நீங்கள் மறக்கக்கூடாது. இந்தியாவின் பெருமை வளர உழைக்கவேண்டும் என்று உறுதி கொள்ளுங்கள்.

மீட்சிப் படகு

சென்ற 130 ஆண்டுகளில், பிரிட்டிஷ் கரையோரப் பகுதிகளில் மூழ்கிய கப்பல்களிலிருந்து சுமார் 31,000 பேர்களை, சமூக சேவா தொண்டர்கள் காப்பாற்றி இருக்கிறார்கள்,

கடலில் தத்தளிப்போரைக் காக்க உலகின் பல பாகங்களில், சமூக சேவை ஸ்தாபனங்கள் பணியாற்று கின்றன. இவற்றில் மிகப் பெரியது, பிரிட்டனிலுள்ள ராயல் நேஷனல் லைப்-போட் இன்ஸ்டிட்யூஷன். இது பிரிட்டனைச் சுற்றி 151 நிலையங்களை அமைத்துக்கொண்டு பணியாற்றுகிறது; 155 மீட்சிப் படகுகளைப் பராமரித்து வருகிறது. நூற்றுக் கணக்கில் மக்கள் இதில் சேர்ந்து தொண்டாற்றுகிறார்கள். பிரிட்டிஷ் கடற்கரை கிராமங் களில் வாழும் மக்கள்—குறிப்பாக மீனவர்கள்-தலைமுறை தலைமுறையாக மீட்சிப்பணி செய்துவருகிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

சேதமடைந்த கப்பல்களிலிருந்து மீட்கப்பட்ட மாலுமிகளிக்கு உதவும் நோக்கத்துடன் பாம்பர்க் (நார்த் தம்பர்லாந்து) என்னுமிடத்தில், 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஓர் சங்கம் அமைக்கப்பட்டது. டர்ஹாம் பிஷப் 8-ஆம் பாரன் க்ரூ நிறுவிய அறக் கட்டளையில் இருந்து இந்தச் சங்கத்திற்கு நிதி உதவ 1721-ஆம் ஆண்டில் ஏற்பாடாயிற்று. மூழ்காத படகு ஒன்றைக் கட்டுவது பற்றி ஆராய்ச்சி நடத்த, இந்த அறக்கட்டளை யிலிருந்து நிதியுதவ முடிவு செய்தார்கள்.

கப்பற் சேதத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்றுவதற்காக 1790-ஆம் ஆண்டில் 'ஒரிஜினல்' என்று பெயரிடப்பட்ட மீட்சிப் படகு ஒன்று கட்டப்பட்டது, இது தொடர்ந்து நாற்பதாண்டுகளுக்குச் சேவை செய்தது: 1790—1824 ஆண்டுகளில், தனியார் முயற்சியால் பிரிட்டிஷ் கரைகளில் 40 மீட்சிப்படகு நிலையங்கள் ஏற்பட்டன.

பிரிட்டிஷ் கரைகளில் கப்பல் விபத்துகள் ஏற்படும் போது மீட்சிப் பணி செய்ய தேசீய ஸ்தாபனம் ஒன்று தேவை என்று ஸர் வில்லியம் ஹில்லாரி நினைத்தார். டக்ளஸ் மீட்சிப்படகுத் தொண்டர்களில் ஒருவர் அவர். 1823-ஆம் ஆண்டில் தமது நோக்கம் வெற்றிபெற அனைவரும் உதவவேண்டும் என்று பிரிட்டிஷ் மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். அதற்கு மக்களுடைய ஆதரவும் கிடைத்தது. 1824-ஆம் ஆண்டு தொடக்கத்தில் லண்டனில் ஒரு கூட்டம் நடந்தது. அதில் கப்பற் சேதத்தில் சிக்கியவர்களுடைய உடைமைகளையும் உயிர்களையும் காப்பாற்ற தேசீய ஸ்தாபனம் ஒன்றை நிறுவுவதென்றும், மக்கள் தரும் கொடை மூலம் அதை நிருவகிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இதுதான் உலகிலேயே முதன் முதலாகத் தோன்றிய மீட்சிப் படகுச் சங்கம், முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு இதனுடைய பெயரை 'ராயல் நேஷனல் லைப்போட் இன்ஸ்டிட்யூஷன்' என்று மாற்றியமைத்தார்கள்.

மக்களுடைய கொடை மூலமும் 'லைப்-போட்' தின வசூல் மூலமும் இந்த ஸ்தாபனத்திற்கு நிதி வசதி கிடைத்திருக்கிறது. 1854 முதல் 1869 வரையில் ஆண்டு தோறும், சர்க்கார் மான்யம் கிடைத்தது.

1957-ஆம் ஆண்டில் இந்த ஸ்தாபனத்தின் வருமானம் 997,800 பவுன், செலவு 957,000 பவுன்.

தேவைக்கு ஏற்றபடி பலரக மீட்சிப்படகுகளை, பல நிலையங்களில் நிறுவியிருக்கிறார்கள். 'பார்னெட்' என்ற படகு இரட்டை எஞ்சின்கள் உள்ளது. 52 அடி நீள முள்ள இதைக் கட்ட 38,500 பவுன் செலவாயின. 8 மாலுமிகளுள்ள இந்தப் படகில் 100 பிரயாணிகள் பிரயாணம் செய்யலாம். லிவர்பூல் என்ற படகு 35 அடி நீளமுள்ளது; 30 பேர்களை ஏற்றிச் செல்லக்கூடியது. இதன்விலை ரூ. 17,000 பவுன். கடுமையான காற்றிலும் கடற்கொந்தளிப்பிலும் செல்லக்கூடிய முறையில் இவை கட்டப்படுகின்றன.

1957-ஆம் ஆண்டில், மீட்சிப் படகுகள் 700 தடவை கடலில் சென்றன; 609 பேர்களை மீட்டன. இது தவிர, 144 கப்பல்களுக்குச் சேதமேற்பட்டது காக்க உதவின. 174 கப்பல்களுக்குப் பல்வேறு வழிகளில் உதவியளித்தன.

பொதுவாக, சிறிய படகுகளின் உதவிதான் ஆபத்துக்காலங்களில் அவசியமாகயிருக்கிறது. 1957–ஆம் ஆண்டில், ஆகாய விமான விபத்தில் சிக்கியவர்களை மீட்க, 44 தடவை மீட்சிப் படகுகளின் உதவி கோரப் பட்டது. சாதாரணமாக ஜுலை—ஆகஸ்டு மாதங்களில் தான், மீட்சிப் படகுகளுக்கு அதிக வேலை இருப்பது வழக்கம். அந்தக் காலத்தில்தான் உல்லாசப் பிரயாணம் செய்வோர் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது.

1956 ஜுலை 28-ஆம் தேதியை மீட்சிப் படகுத் தொண்டர்கள் மறக்கவே முடியாது. அன்று பிரிட்டிஷ் கரைகளில் புயல் வீசிற்று. மணிக்கு 88 மைல் வேகத்தில் வீசும் காற்றில் கப்பல்கள் தத்தளித்தன. நாட்டின் பல நிலையங்களிலிருந்து 52 படகுகள் மீட்சிப் பணிக்குப்

புறப்பட்டன. அவை 100 பேர்களைக் காப்பாற்றின. 14 கப்பல்களைச் சேதத்திற்காளாகாமல் மீட்டன.

மீட்சிப் படகுத் தொண்டர்கள் சாகஸம் மிகுந்தவர்கள். அவர்களைப் பற்றி பலப்பல கதைகள் கூறுவது உண்டு. 1899 ஜனவரி 12உ போர்லாக் விரிகுடாவில் ஒரு கப்பல் புயலில் சிக்கிக் கொண்டது. மீட்சிப் படகுத் தொண்டர்கள் உதவிக்குத் தயாரானார்கள். ஆனால் கடலில் இறங்க முடியவில்லை. லின்மத் துறைமுகத்தில் கொந்தளிப்பு அதிகமாக இருந்ததால் சுமார் 13 மைல்களுக்கு அப்பாற் சென்று கடலில் இறங்கத் திட்டமிட்டார்கள். இடையில் ஒரு குன்று இருந்தது. தொண்டர்கள் மனஞ் சோரவில்லை. மக்கள் உதவிக்கு வந்தார்கள். குன்றில் ஏறி இறங்கிப் படகுடன் சென்றார்கள். பிறகு கடலில் இறங்கிப் புயலில் தத்தளித்துக் கொண்டிருந்தவர்களை மீட்டு வந்தார்கள்.

தென்கிழக்கு இங்கிலாந்துக் கரையில், இந்தியன் சீப் என்ற கப்பல் 1881 ஜனவரி 11உ அன்று புயலில் சிக்கிக் கொண்டது. மீட்சிக்குத் தொண்டர்கள் இருளையும் புயலையும் இலட்சியம் செய்யாமல் கடலில் குதித்தார்கள். முழுகிக்கொண்டிருந்த கப்பலிலிருந்து 11 மாலுமிகளைக் காப்பாற்றினார்கள். கப்பற் தலைவனும் 16 மாலுமிகளும் உயிரிழந்தார்கள்.

பாய்மரக் கப்பல்கள் கடலைக் கிழித்துச் சென்ற காலத்தில்தான் கப்பற்சேதம் அதிகமேற்பட்டது. ஆரம்ப காலத்தில், மீட்சிப் படகுகள் விசையால் இயங்கவில்லை. கொந்தளிக்கும் கடலில் துடுப்பைப் போட்டுக் கொண்டு தொண்டர்கள் செல்வார்கள். மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் நடந்தபோது துடுப்புப்படகுகளே சேவை

செய்தன. கடுங்குளிரைச் சமாளிக்க வழியில்லே. ஆனல் விசைப்படகுகள் வந்த பிறகு நிலேமை மாறிற்று.

மீட்சிப்பணியில் சிறப்பாகத் தொண்டாற்றிய ஹென்ரி ஜியார்ஜ் பிளாக், நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தமது 78-ஆம் வயதில் காலமானர். அவரைப் போல சாகஸச் செயல்களேச் செய்தவர் பிரிட்டனில் கிடையாது. அவருக்கு ஜியார்ஜ் கிராஸ் பதக்கமும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய பதக்கமும் வழங்கி, கௌரவித்தார்கள். மீட்சிப் படகு ஸ்தாபனம், அவருக்கு மும்முறை தங்கப்பதக்கங்களும், நான்கு தடவைகளில் வெள்ளிப் பதக்கங்களும் வழங்கிப் பாராட்டியது. அவர் 71-ஆம் வயதில், 53 ஆண்டுகள் சேவைக்குப் பிறகு ஓய்வு பெற்ருர்.

பூமி

எஸ். ஸ்ரீநிவாஸன்

இருள் தருமாஞாலமென்று இகழப்படுவதும், வசுந்தரா என்று போற்றப்படுவதுமான ஆழி சூழ் வையகத்தின் கதையே மிக்கவேடிக்கையானது,கவர்ச்சிகரமானது. முதன் முதலில் மிக்க வெப்ப முடைய ஆவிகளாலும், உருகிய நிலைமையிலுள்ள திடப் பொருள்களாலும் ஆன ஒரு மொந்தையாய் இருந்து, படிப்படியாகவும் கடுமையானதுமான பலவித மாறுதல்களுக்கு உள்ளாகி இன்றைய வடிவத்தையும்,மேற் பரப்பையும் பெற்றிருக்கிறது.

இப்பூமி நூறுகோடி ஆண்டுகட்குமுன்தோன்றியிருக்க வேண்டுமென்று கூறுகின்றனர். அது ஒரு சூரியக் குஞ்சு. சூரியனும் ஒரு பெரிய நட்சத்திரமும் ஒன்றோடொன்று மோதியதால் சூரியனிடமிருந்து ஒரு பகுதி சிதறி அதுவே பூமியாயிற்று என்கிறது ஒரு கொள்கை. இக்கொள்கை இன்று புறக்கணிக்கப்பட்டு விட்டது. லாப்ளேஸ் (Laplace) என்பார் சூரியன் வெகு வேகமாகச் சுழன்றபோழுது அதன் மத்திய பாகத்திலிருந்து சில பகுதிகள் வட்டமான பாதையில் வெளிக்கிளம்பிப் பிறகு இன்றைய கிரகங்களாக ஆகிவிட்டிருக்கவேண்டும் என்றார். இந்தச் சித்தாந்தமும் இன்று ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை. ஸர் ஜேம்ஸ் ஜீன்ஸ் என்பாருடைய Tidal Theory இன்று ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அதன்படி சூரியன் அதைவிடமிக்க பலமுள்ள ஒரு நட்சத்திரத்தால் இழுக்கப்படும் பொழுது இளகிய நிலையிலிருந்த

சூரியன் நீண்டு முட்டை வடிவமடைந்து, அதிக இழுப்புக்கு உள்ளான பகுதி சிதைந்து சூரியனைவிட்டுக் கிளம்பி, அதைச் சுற்றி வரும் ஒரு கிரகமாகி விட்டிருக்க வேண்டும். இங்ஙனமே இதர கிரகங்களும் அமைந்திருக்கவேண்டும் என்கிறது மேலே கூறப்பட்ட சித்தாந்தம். எவ்வாறு இருப்பினும், பூமி சூரியனிடமிருந்து புறப்பட்ட ஒரு பகுதியே என்பதில் ஐயமில்லை.

ஒரு காலத்தில் உருவமற்று, வடிவற்று இருந்த பூமியின் மேற் பரப்பு உயிரினம் வாழத் தகுதியுள்ளதாக மாறுவதற்குப் பலகோடி ஆண்டுகள் பிடித்திருக்க வேண்டும். அதிக வெம்மையோடுகூடிய ஆவிகளும், இளகிய திடப் பொருள்களும் கொண்டு உருவமற்று இருந்த பூமி நாளடைவிற் குளிர்ந்து இன்றைய வடிவத்தை அடைந்தது. அது தன்னுடைய பாதையில் உருண்டு செல்லுவதற்குச் சூரியன் துணையாயிருக்கிறது. பூமிக்கு ஒரு உபகிரகம் உண்டு; அது தான் சந்திரன்; பூமி தோன்றிப் பல கோடி ஆண்டுகளுக்குப் பின்னரே அதன் மேல் உயிரினம் தோன்றியிருக்கவேண்டும். முதன் முதலில் மிகச் சிறிய ஒரு செல் அங்கஜீவிகள் (Single celled animals and plants) தோன்றிப் பிறகு தான் படிப்படியாக இன்று காணும் உயிர் வகை ஏற்பட்டிருக்க வேண்டும்.

பூமியில் உயிரினம் தோன்றிய கதையே மிகக் கவர்ச்சிகரமானது. ஒரு செல் அங்க ஜீவிகளிலிருந்து, நட்சத்திர மீன்கள் முதலியன தோன்றின. பிறகு முதுகெலும்புள்ள மீன்கள் தோன்றின. அடுத்து நீரிலும், நிலத்திலும் வாழக்கூடிய தவளையினமும் (Toads) அடுத்த படியில் ஊர்வனவான((Reptiles)முதலை, ஆமை பாம்பு, பல்லி ஆகியவையும், முடிவாகப் பறவைகளும் குட்டிபோட்டுப் பால் கொடுக்கக்கூடிய பிராணிகளும்

(Mammals) இறுதியாக மனிதனும் தோன்றியிருக்க வேண்டுமென்பது உயிரினத்தின் பரிணாமக்கொள்கை. இந்த ரீதியில் நோக்கின் உயிர்மரத்தின் உச்சியில் மனிதன் தான் இருக்கவேண்டுமென்பதற்கில்லை என்று அறிஞர் கூறுகின்றனர். உயிரற்ற ஜடப் பொருளிலிருந்து முதன் முதலாக உயிரினம் தோன்றியது இயற்கையின் விந்தையுள் விந்தையாகும்.

பூமியின் அமைப்பைப் பற்றிச்சிறிது நோக்குவோம். மேற்பரப்பில் செழுமையும், பசுமையும் கொண்டு விளங்கும் பூமி, அதன் நடுமையத்தில் மிக்க வெம்மையோடு கூடி இளகிய நிலைமையில் இருக்கிறது. இப் பகுதி நாலாயிரம்மைல் விட்டமுடையது. இதில் பெரும்பகுதி அயமாக இருக்கவேண்டும். இதைச் சுற்றி இருக்கும் அடுத்த அடுக்கு இரண்டாயிரம் மைல் கனத்திற்குச் சிவப்பு உஷ்ணத்தில் இருக்கும் கனத்த பாறைகளால் ஆனது. (Barysphere) இதற்கு மேலாக இருபத்தைந்து முதல் முப்பது மைல் கனத்திற்கு மண்ணாலும், மலையாலும் ஆன மேற் பரப்பு இருக்கிறது. (Lithosphere) இப் பரப்புக் கற்பாறைகளும், படிவுப் பாறைகளும் கொண்டது. இப் படிவுப் பாறைகளில் மணல் பாறைகளும் சுண்ணும்புக்கற் பாறைகளும் காணப்படுகின்றன. கடினமான மேற் பரப்பிலேற்பட்ட குழிவுகளில் கடல்கள் ஏற்பட்டன. இதை நீர்ப் பரப்பு (Hydrosphere) என்பர். இக் கடல்கள் சராசரி இரண்டரை மைல் அழமுடையன. மிக ஆழமான பாகம் பிலிப்பைன் தீவுகளுக்கு அருகே இருப்பதாகக் கண்டிருக்கின்றனர். இதற்குமேல் இருப்பது காற்று மண்டலம் (Atmosphere) இது சுமார் 60 மைல் (?) உயரம் வரை பரவியிருப்பதாகத் தெரிகிறது. ஒரு மைல் ஆழத்திற்குக் கீழே இதுவரை மனிதனே போனதில்லை.

நாளடைவிலே பூமியின் மேற்பரப்புக் குளிரவும் அதைச் சூழ்ந்திருந்த ஆவி குளிர்ந்து மழையாகப் பொழிந்தது. மேற்பரப்புச் சுருங்கியதால் ஏற்பட்ட குழிவுகளில் மழைநீர் நிரம்பிக் கடல்கள் ஏற்பட்டன. இவ்வாறு ஏற்பட்ட கடல்களின் பரப்பு மொத்தத்தில் 5×7 பாகமும் நிலப் பகுதி 2×7 பாகமும் ஆகும்.கடல்கள் மழை உண்டாவதற்கும், பூமியின் வெப்பத்தைத் தணிப் பதற்கும் மிக்க அவசியமானவை.

மலைகள் எவ்வாறு உண்டாயின? மிக்க வெம்மையா யிருந்த பூமி குளிரவும், மேற்பரப்பில் ஆவி உறைந்து, சுருங்கி மேடு பள்ளங்களோடுகூடிய மலைப் பரப்பு உண் டாயிற்று. மேற்பரப்புச் சுருங்குவதால் ஏற்பட்ட அழுத் தத்தினுலும், உள்ளிடை வெப்பத்தினுலும், பூமியின் அடியிலிருந்து உருகிய மலைக் குழம்பு (Lava) எரி மலைகள் மூலம்வெளியே கக்கப்பட்டது. இம்மலைக் குழம்பு உறைந்து பல விடங்களில் மலைப் பாறைகள் ஏற்பட் குள்ளன. நமது நாட்டின் தக்காணப் பகுதி இவ்வாறு ஏற்பட்ட எரி மலைக் குழம்பு உறைந்து பலவிடங்களில் மலைப் பாறையே (Deccan Lava Region) ஆகும். இப் பகுதிகள் உலகிலேயே மிக்கப் பழமையானவையாகக் கருதப்படுகிறது.

மேலும் நதிகள் கொண்டு செல்லும் மண்ணும் மண லும் கடலுக்கு அடியில் அடுக்கடுக்காகப் படிகின்றன. இவ்வடுக்குகளுக்கிடையே தாவர, பிராணி உயிரினங்கள் சிக்கிச் சுண்ணும்புப் பாறையாகவிடுகின்றன. இவ்வாருன கடல் தளம் மேலே உந்தப்பட்டு வறண்ட நிலப் பகுதி யாகக் காணப்படுகின்றன. இவை படிவுப் பாறைகள் (Sedimentary Rocks) என அழைக்கப்படுகின்றன. இப்பாறைகளின் நடுவே அழுந்தி இறந்துபோன

உயிரினங்களின் சின்னங்கள் இன்றும் இப்பாறைகளின் ஊடே காணப்படுகின்றன. இவற்றை 'கல்லில் புதைந்த படிமம்' (Fossils) என்பர். இவ்வகைப் பாறையினின்றும் செதுக்கப்பட்ட அழகான மேஜை ஒன்றைத் திருவனந்த புரம் பொருட்காட்சி சாலையில் இன்றும் காணலாம்.

பிறிதொரு விதமான பாறைகளும் உள. பழைய பாறை அழுத்தத்தினுலும், இரசாயன மாறுபாடுகளாலும் உருமாறி, புதிய தோற்றத்தோடு காட்சி அளிக்கும். இவற்றை உருமாறிய பாறைகள் (Metamorphic Rocks) என்பர்.

வெவ்வேறு விதப் பாறைகளை ஆராய்ந்தோர் இப் பாறைகள் படிப்படியாக நான்கு வெவ்வேறு காலங்களில் தோன்றியிருத்தல் வேண்டும் என்று கூறுவர். இன்று இருக்கும் நிலைமையைப் பூமி அடைய இரண்டரை கோடி முதல் நூற்றைம்பது கோடி வருடம் வரை பிடித்திருக்க லாம்.

மண்ணுலான இப்புவியில் ஸகலவித ஐசுவரியங் களும் மறைந்தும் புதைந்தும் கிடக்கின்றன. வீடு கட்டுவதற்கும் பாண்டங்கள் செய்வதற்குமான மண்ணும், வீடு கட்டவும் சாலைகள் போடவும் வேண்டிய கற்களும், மதிப்பு மிக்க உபயோகமான உலோகங்களும், எரி பொருளான தாது எண்ணெய்களும் பூமியின் கண் உள்ளன. பூமி மண்ணுல் ஆகியிருப்பதால் உயிரினம் வாழ இயலுகிறது, ஆகாரப் பொருட்களான தாவர இனங்கள் வளர்வது மண்ணுலேயே. மனிதன் எத்துணை வகைகளில் தன்னை இழிவு படுத்தினுலும், அதை மேற் கொள்ளாது ஒன்றைப் பலவாகத் திருப்பிக் கொடுக்கும் மண்ணை "பொறுமைக்குப் பூமி தேவி" என்று கவிஞர் உள்ளக் கிளர்ச்சி யோடு கூறுவர்.

பூமியிலிருந்து சூரியன் 93 மிலியன் மைல் தூரத்தி லிருக்கிறது. சூரியனிடமிருந்து தான் நமக்கு வேண்டிய ஒளியும், வெப்பமும் இடையருது கிடைத்துக் கொண்டே இருக்கின்றன. முன்பே கூறியது போலப் பூமி தன்னை யும் சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருவதால் இரவு, பகல் கொண்ட நாட்களும், வருடங்களும் தோன்று கின்றன. பூமியின் சுழற்சி அச்சுச் சாய்ந்திருப்பதால் சூரியன் புவி மையக் கோட்டிற்கு $23\frac{1}{2}$ டிகிரி வடக்கேயும் தெற்கேயும் ஆறு,ஆறு மாதத்திற்கு உலவுவதாகத் தென் படுகிறது. இவ்வாறே அயனங்கள் உண்டாகின்றன. புவிமையக் கோடின் மேலாக சூரியன் மார்ச்சு 21, செப் டம்பர் 21-ம் தேதிகளில் உலாவுகிறது. அந்நாட்களைச் "சமராத்திரி நாட்கள்" (Eguinox) என்று கூறுவர்; ஏனெனில், அத் தினங்களில் இரவு, பகல் நேரம் சமமாக இருக்கும்.

நீங்கள் நிலப் படங்களை (Map) பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? அவற்றின் மேல் வடக்கு தெற்காகவும், கிழக்கு மேற்காகவும் பல கோடுகள் இடப் பட்டிருப்பதைக் கண்டி ருக்கலாம். உண்மையில் இவ்வாருன கோடுகள் ஏதும் பூமியின் மேற் பரப்பில் இல்லை. ஆனால் ஓர் இடத்தை நிர்ணயிப்பதற்காகவும், நேரத்தைக் கணக்கிடுவதற்காக வும் படத்தில் இக் கோடுகளை வரைந்துள்ளனர். வடக்கு தெற்காகச் செல்லும் கோடுகள் துருவங்களில் ஒன்று கூடியும், புவிமையத்தில் விரிந்தும் செல்லுகிறன. இக் கோடுகளைத் தீர்க்கரேகைகள் (Longitude) என்பர். எதிரெதிராக உள்ள ஒரு ஜோடி தீர்க்க ரேகைகள் பூமியை இரு துண்டாக்குகின்றன. லண்டன் நகருக்கு அருகே யுள்ள கிரீனிச் நகர் வழியாகச் செல்லும் தீர்க் காம்சம் பிரதம தீர்க்கத்திற்கு கிழக்கே 180 கோடு களும், மேற்கே 180 கோடுகளும் உள்ளன. கிழக்கே

யுள்ள 180 வது கோடும், மேற்கேயுள்ள 180 வது கோடும் ஒரே கோடு தான் என்பது குறிப்பிடத் தக்கது. ஆகையால் தீர்க்காம்சத்தைக் குறிப்பிடும் காலே, அது கிரீனிச்சிற்கு மேற்கா, கிழக்கா என்று கூறுதல் வழக்கம்.

பூமி மையம் வழியாகக் கிழக்கு மேற்கில் வரையப்பட்டிருக்கும் கோட்டை,புவிமையக் கோடு (Equator) என்பர். இக் கோட்டிற்கு வடக்கேயும் தெற்கேயும் சமதூரத்தில் தொண்ணூறு கோடுகள் இடப்பட்டிருக்கின்றன. இவற்றை அட்சாம்சம் (Latitude) என்பர். இவற்றில் ஒரு ஜோடி அட்சாம்சங்களுக்கு இடையே உள்ள தூரம் சுமார் 69½ மைல்கள் ஆகும். இக் கோடுகளுள் 23½ டிகிரி வடதென் அட்சாம்சங்களும் 66½ டிகிரி அட்சாம்சங்களும் முக்கியமானவை. 23½ டிகிரி அட்சாம்சங்கள் சூரியன் தலேக்கு நேரப் பிரகாசிக்கும் எல்லேகள். 23½ டிகிரி வட அட்சாம்சத்திற்கு நேராக ஜுன் 21 முதல் 23-ம் தேதி வரையிலும், 23½ டிகிரி தென் அட்சாம்சத்திற்கு நேராக டிசம்பர் 21-ந் தேதி வாக்கிலும் சூரியன் நேராகப் பிரகாசிக்கும். 66½ டிகிரி அட்சாம்சங்களுக்கு வடக்கேயும், தெற்கேயும் பகலவன் கதிர் விழுவதில்லே. ஆகவே இக் கோடுகளுக்கு வடக்கேயும், தெற்கேயும் உள்ள பகுதிகளில் நிரந்தரமான பனி மூடியிருக்கும். 66½ அட்சாம்சங்கள் முறையே ஆர்டிக் வட்டம், அண்டார்டிக் வட்டம் எனப் பெயர்படும்.

பூமி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் சுற்றுவதால், சூரியன் கிழக்கே தோன்றி மேற்கே மறைவது போல் தோன்றுகிறது. ஆகையால் கிழக்கேயுள்ள இடங்களில் முன்பு கூட்டியே சூரியன் தோன்றுவதாகப்படுகிறது. இம்முறையில் கல்கத்தா, சென்னே, பம்பாய் நகரங்களே எடுத்துக் கொண்டால் கல்கத்தாவில் முதலிலும், பிறகு

சென்னையிலும், கடைசியாக பம்பாயிலும் சூரிய உதயம் ஏற்படுகிறது. ஆகையால் ஓரிடத்தின் நேரத்தைக் கணக்கிட தீர்க்காம்சங்கள் அல்லது மத்தியானக் கோடுகள் Meridians பயன்படுகின்றன. 360 மத்தியானக் கோடுகள் ஒரு தடவை நகர நான்கு நிமிடங்கள் பிடிக்கும். ஆகவே கிழக்கிலிருந்து மேற்கே போனால் ஒரு தீர்க்காம்சத்திற்கு நான்கு நிமிடங்கள் தாமதமாகவும், மேற்கேயிருந்து கிழக்கே போனால் ஒரு தீர்க்காம்சத்திற்கு நான்கு நிமிடங்கள் சீக்கிரமாகவும் சூரிய உதயம் ஆகும்.

இவ்வாறு ஒவ்வோரு இடத்திலும் வெவ்வேறு நேரத்தில் நடுப் பகல் ஏற்படுமல்லவா? அதை ஸ்தல நேரம் (Local time) என்பர். ஒரு பெரிய நாட்டிலே ஒவ்வொரு நகரமும் அதனதன் ஸ்தல நேரத்தைப் பின் பற்றினால் குழப்பமாகுமல்லவா? இதைத் தவிர்க்க ஒவ்வொரு நாடும் தனித் தனிப் பொது நேரம் கொண்டுள்ளன. இங்ஙனம் நம் நாட்டின் பொது நேரம் இந்தியப் பொது நேரம் (Indian Standard time I. S. I) எனப் பெறும். தனிப்பட்ட சில நேரங்கள் நீங்கலாக எல்லாவிடங்களிலும் பொது நேரமே பழக்கத்திலிருக்கும். இதே போன்று, உலகப் பொது நேரமாக கிரீனிச் நடுப்பகல் நேரம் (Greenivich Meridian Time G. M. T.) என்பர். இந் நேரம் உலகம் சுற்றும் கப்பல்களிலும், வான ஊர்திகளிலும் பயன்படுகின்றது.

180 டிகிரி கிழக்குத் தீர்க்காம்சமும், 180 டிகிரி மேற்குத் தீர்க்காம்சமும் ஒன்றே என்று கூறப்பட்டதல்லவா? இக்கோடு சில துறைகளில் மிக்க முக்கியமானது. இக்கோட்டிற்கு அகில உலக தேதிக் கோடுக் (International Date line) எனப் பெயர். இக் கோட்டைத் தாண்டி மேற்கே செல்லும் பொழுது நாள் காட்டி (Calendar)யில்

ஒரு நாளைக் கூட்டவும், கிழக்கே போனால் ஒரு நாளைக் குறைக்கவும் வேண்டும்.

தவிரவும், தனது உபகிரகமான சந்திரனாலும் பூமி சிற்சில மாறுதல்களுக்கு உள்ளாகின்றது. இவற்றைச் சந்திரனைப் பற்றிப் படிக்கும் காலைத் தெரிந்து கொள்ளுவீர்கள்.

இப் பூமியின் வருங்காலத்தைப் பற்றிச் சில வேடிக்கையான ஊகங்கள் உள்ளன. நாளடைவில் சூரியன் குளிர்ந்து இப்புவி, உயிர் வாழ்க்கை யற்ற்றொரு சந்திரனாக மாறி விடலாம் என்று கூறுகின்றனர் சிலர். சந்திரன் சிறிதாகப் பூமிக்கு அருகே வந்து கொண்டிருப்பதாகவும் ஒரு நாள் இவ்விரு கோள்களும் ஒன்றோடொன்று மோதித் தவிடுபொடியாகிவிடும் என்பது மற்றொருகூற்று. பூமியின் சுழலும் வேகம் குறைந்து வருவதாகவும், என்றோ ஒரு நாள் பூமி சுழலாமல் நின்று விடலாமென்றும் அதினால் பூமியின் பகுதிகளில் ஒரே வெயிலும் ஒரே இருட்டும் ஏற்பட்டு பூமியில் மிகக் கடுமையான மாறுதல்கள் ஏற்படக்கூடுமென்றும் சில அறிஞர்கள் ஊகிக்கின்றனர். இம் மாறுதல்கள் இன்றோ, நாளையோ சமீபத்திலோ ஏற்படக்கூடியது தில்லை. ஆகையால் இவற்றைக் கண்டு நாம் ஐயுறவேண்டா. அதற்குப் பதில் நம் வாழ்க்கைக்குத் தகுந்தவாறு இப்புவியைப் படைத்தளித்த ஆண்டவன் பெருங் கருணையைப் போற்றுவோமாக!

பிரிட்டனில் சர்க்கார் ஊழியர் சங்கம்

பிரிட்டிஷ் தொழிற் சங்கக் காங்கிரஸில் இணைந்துள்ள பெரிய சங்கங்களில் அஞ்சல் பிரிவு ஊழியர் சங்கமும் சிவில் ஸர்வீஸ் கிளரிகல் அசோசியேஷனும் குறிப்பிடத் தக்கவை. அஞ்சல் பிரிவு ஊழியர் சங்கத்தில் 163,000 அங்கத்தினர்கள் உண்டு. சிவில் ஸர்வீஸ் கிளரிகல் அசோசியேஷனில் 150,000 அங்கத்தினர்கள் உண்டு. பிரிட்டனில் வேறு பல சர்க்கார் ஊழியர்களும் சங்கங்கள் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் ஊழியர்களில் பத்துக்கு ஒன்பது பேர், ஏதாவது ஒரு சங்கத்தின் அங்கத்தினராக இருப்பார்கள். சர்க்கார் குமாஸ்தாக்கள் ஸ்தாபனங்களின் அமைப்பையும் செல்வாக்கையும் பற்றி டாக்டர் பி. வி. ஹம்ப்ரீஸ் என்ற அமெரிக்கப் பெண்மணி ஒரு நூலை எழுதியிருக்கிறார். ஆக்ஸ்போர்டைச் சேர்ந்த பேஸில் பிளாக்வெல் என்ற ஸ்தாபனம் அதை வெளியிட்டிருக்கிறது, [நூலின் பெயர் கிளரிகல் யூனியன்ஸ் இன் தி சிவில் ஸர்வீஸ் விலை 30 ஷில்லிங்.]

டாக்டர் ஹம்ப்ரீஸ், சிவில் ஸர்வீஸ் யூனியன் தலைவர்களையும் சர்க்கார் அதிகாரிகளையும் சந்தித்து தகவல்களைச் சேகரித்தார். அவசியமான தஸ்தவேஜுகளைப் பார்வையிடும் வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தது. குமாஸ்தாக்கள் சங்கம் அமைக்கும் முயற்சி, பிரிட்டனில், நூறு ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிற்று என்றாலும் 1890 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் நிலையாகப் பணியாற்றமுடிந்தது. அரசாங்கத்தின் அங்கீகாரமும் மிகவும் தாமதமாகக் கிடைத்தது.

விட்லி கமிட்டி அறிக்கை

முதல் மகாயுத்தத்திற்குப் பிறகு சர்க்கார் ஊழியர்களிடையே விழிப்பு ஏற்பட்டது. சங்கம் அமைத்துக்கொண்டு பணியாற்றும் கருத்து வலுப் பெற்றது. அந்தச் சமயத்தில் தொழிலுறவு பற்றி ஆராய நியமிக்கப்பட்ட விட்லி கமிட்டியின் அறிக்கை வெளிவந்தது. பாராளுமன்ற அங்கத்தினர் திரு. விட்லி, பின்னுளில் காமன்ஸ் சபையின் சபாநாயகராக பணியாற்றினுர். தொழிலுறவு உறுதிப்பட முதலாளிகளுடைய பிரதி நிதிகளும் தொழிற் சங்கத் தலைவர்களும் உள்ள தொழிற் சபைகள் பணியாற்றுவது அவசியம் என்று விட்லி கமிட்டி கூறிற்று.

தனிப்பட்ட தொழில்களில் முதலாளி தொழிலாளி நல்லுறவு வளர கூட்டுமுயற்சி பயன்படுமானுல் அதே போன்ற முயற்சியால் குமாஸ்தாக்களின் நலனைக்காக்க முடியுமென்று, சம்பந்தப்பட்டவர்கள் சித்தித்து முடிவு செய்தார்கள். தங்களுடைய நோக்கம் வெற்றிபெற இயக்கம் தொடங்கினுர்கள். போர்முடிந்து ஓர் ஆண்டுக்கெல்லாம், வெற்றியும் கிடைத்தது. சிவில் ஸர்வீஸ் ஊழியர்களின் நலனைக் கவனிக்க 54 பேர்களடங்கிய ‘நாஷனல் கௌன்சில்’ ஏற்பட்டது. இதில் பாதிப்பேர்களை சர்க்கார் நியமித்தது. மற்றவர்கள் பல வேறு சர்க்கார் ஊழியர் சங்கங்களின் பிரதிநிதிகள். சர்க்கார் பிரிவுகளிலும் இம் மாதிரி சபைகள் ஏற்பட்டன.

விட்லி கமிட்டி அறிக்கையினுல் நல்ல பலனும் கிடைத்தது. தொழிலாளர் நலனைக் காக்க சங்கங்கள் இருப்பதுபோல சிவில் ஸர்வீஸ் ஊழியர் நலனைக் காக்க சங்கங்கள் தோன்றின. இவற்றை அரசாங்கமும் அங்கீகரித்தது. சம்பளம் முதலியனபற்றி சர்க்காருடன் பேசவும், சிக்கல்கள் எழும்போது சமரஸம் பேசவும் சங்க

நிர்வாகிகள் முன் வந்தார்கள். இதனுல் வேலே நிறுத்தம் போன்ற சிக்கல்களேயும் தவிர்க்க முடிந்தது.

சம்பளம் உத்தியோக உயர்வு முதலிய பிரச்னைகளில் சங்க நிர்வாகிகள் கவனம் செலுத்தினுர்கள். "ஊதியப் பிரச்னைகளில் மட்டுமின்றி, விடுமுறை வசதி வேலே நேரம் உத்தியோக உயர்வுக்கு முயற்சி, முதுமைக்கால ஊதியம் என பல துறைகளில் ஊழியர் நலனைக்காக்க, சங்க நிர்வாகிக்கள் உழைப்பதால் சங்கத்தின் செல்வாக்கு பெருகியதுடன், அங்கத்தினர் எண்ணிக்கையும் பெருகி வருகிறது." என்கிருர் டாக்டர் ஹம்ப்ரீஸ்.

தொழிற் சங்கக் காங்கிரஸுடன் இணைப்பு

நிர்வாகிகளும் ஊழியர்களும் கலந்தாலோசித்து பணி யாற்றும் வாய்ப்பை யளித்தது விட்லி கமிட்டியின் சிறப்பாகும். இதனுல் தகராறுகளுக்கு அப்பாற்பட்ட விஷயங்களேயும் கலந்தாலோசித்துத் திறம்படச் செயலாற்ற முடிகிறது. தொழிற் சங்கங்களும், நிர்வாக விஷயங்களில் தலேயிடாமல், ஊழியர்களுடைய பிரதிநிதி ஸ்தாபனங்களாக பணியாற்றுகின்றன.

பிரிட்டிஷ் தொழிற்சங்க இயக்கத்தில், சிவில் ஸர்வீஸ் யூனியன் மட்டுமே தொழிற் கட்சியுடன் இணைந்திருக்கிறது. மற்ற யூனியன்கள் எந்த அரசியல் கட்சியுடனும் சேரவில்லே.

தொழிற் துறையில் பணியாற்றும் அரசாங்க ஊழியர்களும்-போஸ்டு ஆபீஸ் எஞ்சினீயர் போன்றவர்கள் சங்கம் அமைத்துக் கொண்டிருக்கிருர்கள். இந்த ஊழியர் சங்கங்களில் எட்டுச் சங்கங்கள் தொழிற் சங்கக் காங்கிரஸுடன் இணைந்திருக்கின்றன. ஆகவே பொதுவாகப் பார்த்தால், தொழிற் சங்கக் காங்கிரஸில், சிவில் ஸர்வீஸ்

யூனியன்கள் முக்கிய இடம் பெற்றிருப்பது விளங்கும். தொழிற் சங்கக் காங்கிரஸின் 18 தொழிற் பிரிவுகளில் சிவில் ஸர்வீஸ் சங்கங்கள் தொகுப்பு ஒன்ருகும். தொழிற் சங்கக் காங்கிரஸுடன் இணைந்திருக்கும் 8 சிவில் ஸர்வீஸ் யூனியன்கள் அங்கத்தினர்களுடைய மொத்த எண்ணிக்கை 475,000. முப்பத்தைந்து அங்கத்தினர்களுள்ள தொழிற் சங்கக் காங்கிரஸின் ஜனரல் கௌன்சிலில், சிவில் ஸர்வீஸ் யூனியன் பிரதிநிதிகள் இருவர் இருக்கிருர்கள்.

சிவில் ஸர்வீஸ் ஊழியர்கள், தங்களுடைய குறைகளை எடுத்துக்கூறும் திறமையாலும் பொறுமையுடன் விவாதித்து அதிகாரிகளைத் தூண்டுவதாலும் வெற்றி பெறுகிருர்கள். இவர்களுடைய கொள்கையும் பிரச்னையை அணுகும் முறையும் தொழிற் சங்க இயக்கத்தின் வளர்ச்சிக்கு ஏற்றதாகஇருக்கிறது. இவர்களால்,இயக்கத்திற்குச் சிறப்பாகப் பணியாற்ற முடியும். பொருளாதார-சமூக முன்னேற்றத்திற்குத் தொழிற் துறையில் அமைதி நிலவுவது அவசியமாகையால் இவர்களுடைய பணி இயக்கத்திற்கு அவசியமாகும். இப்படி இன்லாண்டு ரெவினியு ஸ்டாப் பெடரேஷன் செயலாளர் திரு. டக்ளஸ் ஹீட்டன் டாக்டர் ஹம்ப்ரிஸின் நூலுக்கு வழங்கிய முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிருர்.

முப்பரிமாண டெலிவிஷன்

தூரத்தில் நடப்பதைக் காட்டுவது டெலிவிஷன் எனப்படும் தொலைக் காட்சி. திரைப்படங்களின் முப்பரிமாணத் தோற்றத்தைக் காட்டும்படங்கள் உள்ளதுபோல இப்பொழுது தொலைக் காட்சியிலும் முப்பரிமாணத் தோற்றத்தைக் காட்டும் படங்கள் எடுக்கவசதி ஏற்பட்டுள்ளது.

அந்தப் புதுக்ககாட்சிகளைப் படம பிடிக்கும் முறை ஒருவன் இரண்டு கண்களால் காண்பது போன்ற முறை யாகும். அதனுல் இரண்டு படங்கள் மாறி மாறிப் பதிவாகும். இப்படங்களைத் தொலைக் காட்சிக் கருவியின் கண்ணுடித் திரையில் விநாடிக்கு 90 படங்கள் வீதம் விழச் செய்கின்ருர்கள். அவற்றில் 45 படங்கள் வலது கண்ணுல் பார்க்கும் தோற்றத்துக்கும் மற்ற 45 இடது கண்ணுல் பார்க்கும் தோற்றத்துக்கும் சரியாக இருக்கும். வலது கண்ணுல் பார்க்கும் வகையைச் சேர்ந்த படம் ஒன்று அத்திரையில் விழுந்தம் அதற்கடுத்த படம் இடது கண்ணுல் பார்க்கும் தோற்றத்தைக் காட்டுவதாக இருக்கும். இவ்வாறு இருவகைத் தோற்றங்களும் மாறி மாறிக் காணும். இப்படங்களைக் காண்போர் தனி வகைக் கண்ணுடி அணிந்திருப்பர். இக் கண்ணுடி வழியாகப் பார்ப்பவர்களுக்குக் கண்ணில் இரண்டு தோற்றங்கள் பதிவானுலும் அவை மிக வேகமாகத் தெரியும்; ஆனுல் மற்ற காமிராக்களில் எடுத்த படங்களைக் காட்டிலும் அதிக ஆழமுள்ள படங்களாகத் தோன்றும்.

Edited, Printed and Published by A. K. CHETTIAR at Kumari Malar Press, 100, Mowbrays Road, Madras-18

கவுண்டர் & கம்பெனி
(பிரைவேட்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்:	கிளை ஆபீஸ் & ஷோரூம்
கூட்ஸ் ஷெட் ரோடு	7/69, ஜெயில் ரோடு
பொள்ளாச்சி.	கோயமுத்தூர்

கோயமுத்தூர் & நீலகிரி ஜில்லாக்களுக்கு:

டாடா-மெர்சிடெஸ்-பென்ஸ் டீசல் டிரக்,

ராயல் என்பீல்ட் மோட்டார் சைக்கிள்

விற்பனையாளர்கள்.

நா. மகாலிங்கம், B.Sc., A.M.I.E., M.L.A.,

மானேஜிங் டைரக்டர்.



உங்களுக்கு ஏன் கவலை?



நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம்

TVS

வெளி அறிகுறிகளைக் கொண்டு மட்டுமே உள்ளே நிறைந்துள்ள கோளாறுகளைக் கண்டுபிடிக்க முடியாது. 45 வருட அனுபவம் வாய்ந்த எங்கள் ஸ்தாபனத்தின் நிபுணர்கள் உங்கள் காரின் ஒவ்வொரு பாகத்தையும் நன்கு அறிவர். ஆகையால் எந்தக் கோளாறையும் வெகுசீக்கிரத்தில் திருத்திக் கொடுப்பார்கள்.

கார் கவலை நீங்க எங்களிடம் அனுப்புங்கள்

டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட்

மதுரை - திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை - சேலம் - கோயம்புத்தூர்